ஓய்வு நாளான சனிக்கிழமை யன்று இயேசுநாதர் இந்த நோயாளியைக் குணப்படுத்தினர்.

''நடைமுறைச் சம்பிரதாயத்துக்குப் புறம்பான செயல் இது'' என்று, யூத குருமார்கள் இயேசுநாதரை எதிர்த்தார்கள்.

இவர்களுக்கு இயேசுநாதர் பதில் சொன்னர்: ''என் தந்தையான இறைவன் எப்பொழுதும் செயலாற்றுகிருர். அவரைப் போலவே நானும் செயலாற்றுகிறேன்.''

இந்தப் பதில் யூத குருமார்களுக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. ''இந்த மனிதன் சம்பிரதாயங்களுக்கு விரோதமாக நடக்கிருன். கடவுளைத் தன் தந்தை என்று உறவு கொண்டாடுகிருன். கடவுளுக்கு நிகராகத் தன்னைக் கருதிக் கொள்கிருன். இவனைச் சும்மா விட்டு வைத்தால் ஆபத்து'' என்று கருதினர்கள்.

குருமார்களின் மனப்பாங்கை இயேசுநாதர் புரிந்து கொண்டார். மேலும் ஜெருசலத்தில் தங்கிஞல் தம்மை அவர்கள் கொன்றுவிடக் கூடும் என்று அவர் தெரிந்து கொண்டார் தாம் செய்ய வேண்டிய பணி பாக்கி இருந்தாலும், தனக்குப் பின்னர், தாம் விட்டுச் செல்லும் பணிகளைத் தொடர்ந்து செய்ய, திருச்சபை ஒன்றை நிறுவுவது அவசியம் என்று அவர் கருதியபடியாலும், அரைகுறையாகக் காரியங்களை விட்டுவிடுவது கூடாது என்று அவர் நினைத்தாலும், ஜெருசலத்தை விட்டு இயேசுநாதர் கலிலேயாவுக்குத் தம் சீடர்களுடன் திரும்பினர்.

எந்தக் காரியத்தையும் தக்க காலத்தில் செய்வதுவே தகுந்த பலனை அளிக்கும். அவசரப்பட்டு செய்யவும் கூடாது. அசட்டையாக தள்ளிப்போட்டுவிடவும் கூடாது. இந்த உண்மை நன்கு அறிந்த தெய்விக மேதை இயேசுநாதர். அதனல்தான் அவர் இது சமயம் ஜெருசலத்திலிருந்து கலிலேயா சென்றுர்.

இயேசுநாதர் சென்றுவிட்டார் என்பது தெரிய வந்ததும், எதிரிகள் சும்மா இருப்பார்களா? மேலும் அவர்

என்ன என்ன செய்கிறார் என்பதை அறிய ஒற்றர்களை அனுப்பினார்கள்.

அவர்களும் இயேசுநாதருக்குப் பின்னே சென்று, அவர் செய்வதை எல்லாம், ஒன்றும் விடாமல் கவனித்தார்கள்.

ஒற்றாட வந்திருந்த இவர்கள் இயேசுநாதரைக் கவனித்துக்கொண்டே இருப்பதோடு நிற்கவில்லை. அவ ருக்கு எதிராக மக்களைத் தூண்டும் காரியத்திலும் அவர்கள் ஈடுபட்டு இருந்தார்கள்.

ஒரு நாள் இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் தத்தம் கைகளைக் 'கழுவிக்கொள்ளாமல் உணவு உண்பதை ஒற்றர்கள் பார்த்தார்கள். ஆசாரத்துக்கு விரோதமான இந்தச் செயலைப் பகிரங்கமாகக் கண்டித்தால் இயேசுநாதர் மீதும் அவருடைய சீடர்கள்மீதும் மக்கள் வெறுப்புக் கொள்ள வாய்ப்பு உண்டாகும் என்று ஒற்றர்கள் நினைத் தார்கள்.

ஆகவே, இயேசுநாதரை நோக்கி, ''போதகரே! நீங்க ளும் உங்கள் சீடர்களும் கைகளைக் கழுவிக்கொள்ளாமல் சாப்பிடுகிறீர்களே! நம் முன்னோரின் ஆசாரங்களை இப்படி நீர் புறக்கணிப்பது முறையா?'' என்று கேட்டார்கள்.

இதற்கு இயேசுநாதர் ''எசையாஸ் என்னும் தீர்க்க தரிசி, மக்கள் வாயால் என்னைப் பாராட்டுகிறார்கள். மனத்துக்குள் என்னைப் பழிக்கிறார்கள் என்று உங்களைப் பற்றித் தீர்க்கதரிசனம் செய்திருக்கிறார்'' என்று சுட்டிக் காட்டினார்

மேலும் அவர் தொடர்ந்து சொன்னார்: ''நீங்கள் இறைவனுடைய கட்டளைகளைப் புறக்கணித்துவிட்டு, மனிதனின் ஆசாரங்களைப் பற்றிக்கொண்டு, அவற்றைப் பிரமாதப்படுத்துகிறீர்கள். சட்டி பானைகளைக் கழுவுவதும், கைகால்களைக் கழுவுவதும் முக்கியமான ஆசாரம் அன்று'' என்று குறிப்பிட்டுச் சொன்னார்.

''சாரத்தை விட்டுவிட்டுச் சக்கையைப்பற்றிக் கொள் கிறீர்கள். உள்ளே பொதிந்து இருக்கும் உண்மையை ஒதுக்கி விட்டு, வெறும் வார்த்தைகளைப் பற்றிக்கொண்டு வாதம்

செய்கிறீகள். இது முறையா?'' என்று இயேசுநாதர் எடுத்து விளக்கியதும், குருமார்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் தங்கள் குட்டு வெளிப்படுவதைக் கண்டு ஆத்திரம் அடைந்தார்கள்.

இத்தகையவர்களிடம் பேசுவதை அத்துடன் நிறுத்திக் கொண்டு இயேசுநாதர் பொது மக்கள் பக்கம் திரும்பினார்: ''மக்களே! மனிதன் வாய்க்குள் செலுத்துவது ஒருவனை அசுத்தப்படுத்தாது. ஆனால், வாயிலிருந்து வெளிப்படுவது அசுத்தமாய் இருந்துவிட்டால் அதுவே தீமை. உள்ளத்தில் இருக்கும் எண்ணங்கள் சொல்லாகவும், செயலாகவும் பரிணமிக்கின்றன. கொலை, கொள்ளை, நிந்தனை, பொய்ச்சாட்சி, விபச்சாரம் முதலியன உள்ளத்திலிருந்தான் உண்டாகின்றன. அவைதான் மனிதனைக் கெடுக்கின்றன'' என்று சொன்னார்,

இயேசுநாதர் சொன்னவற்றையும் செய்தவற்றையும் பார்த்துக்கொண்டு, ஒற்றர்கள் ஜெருசலம் திரும்பி, பரிசேயர்களிடமும் சதுசேயர்களிடமும் விவரங்களைத் தெரிவித்தார்கள்.

ஜெருசலம் வாழ் பிரமுகர்களுக்கும் இயேசுநாதருக்கும் இடையில், நாளுக்கு நாள், மனவேறுபாடும் வாக்குவாதங்களும் அதிகரித்தன.

பதவியிலும் பெருமையிலும் அமர்ந்து இருக்கும் யூதக் குருமார்களுக்கு, இயேசுநாதரின் போதனைகள் கொஞ்சமும் பிடிக்கவில்லை. வெளிப்படையாகவே இயேசுநாதரை நிந்திக்கவும், அவர்மீது குற்றம் சுமத்தவும், அவரைக் கொடுமைப் படுத்தவும் அவர்கள் ஆயத்தமானார்கள்.

இரு தரப்பினருக்கிடையே நிலவும் வேறுபாடுகளும் விவாதங்களும் பொது மக்களுக்கும் தெரிந்து போயிற்று. ஆகவே, இவற்றைப்பற்றி, பொது மக்கள் பேசத் தொடங்கினார்கள். வீடுகளிலும் வீதிகளிலும் கோயில்களிலும் குளக்கரையிலும், சத்திரங்களிலும் சாவடிகளிலும், பட்டிணக்கரையிலும் பட்டிக்காட்டிலும், மக்கள் இயேசுநாதரைப்பற்றியும் அவருடைய எதிரிகளைப் பற்றியும் பேசினார்கள்; அதிகாரிகளும் பேசினார்கள். அடிமைகளும் பேசினார்கள்; பண்டிதரும்

பேசினார்கள்; பாமரரும் பேசினார்கள்.

இப்படிப் பேசின மக்களிடையே இயேசுநாதரை ஆதரிப்போரும் இருந்தார்கள்: எதிர்ப்போரும் இருந்தார்கள். நடுநிலையாளர்களும் இருந்தார்கள்.

இப்படி ஒரு கொந்தளிப்பு மக்களிடையேநிலவியபோது, தம் சீடர்களில் சிலரை அழைத்துக்கொண்டு, இயேசுநாதர் வேறு ஒரு அன்னியப் பிரதேசத்துக்குப் போய்விட்டார்.

பொயினிசியப் பெண்

இதன் பின் இயேசுநாதர் யூதர்கள் வசியாத ஒரு பிரதேசத்துக்குப் போனார்.

வடக்கே இருக்கும் பொயினிசியா நாட்டில் பழைமையான துறைமுகப் பட்டிணம் ஒன்று உண்டு. அந்தப் பட்டணத்துக்குச் சென்று இயேசுநாதர் சிறிது காலம் வசித்தார்.

அந்த ஊரில் பொயினிசியப் பெண்மணி ஒருத்தி இயேசுநாதரைச் சந்தித்தாள். தன் ஒரே புதல்வியைப் பீடித்திருக்கும் பேயை இயேசுநாதர் விரட்டி ஓட்டக் கூடும் என்று அவள் முழுக்க முழுக்க நம்பினாள். ஆகவே, அவள் அவரை அணுகி, ''ஆண்டவரே! எங்கள் மீது கருணைபுரியும்; என் ஒரே புதல்வி பேயால் பீடிக்கப்பட்டுப் பெரிதும் அவதிப் படுகிறாள்'' என்று பரிதாபமான குரலில் வேண்டினாள்.

இப்படிஅந்தப் பொயினிசியப் பெண் வேண்டியதும், அவளிடம் பணிவும் நம்பிக்கையும் உண்மையாக இருக்கிறதா என்பதைப் பரிசோதித்துப் பார்க்க, இயேசுநாதர் திருவுளம் பற்றினார். ஆகவே, அந்தப் பெண்மணிக்குப் பதில் ஒன்றும் சொல்லாது, இயேசுநாதர் சென்றுகொண்டிருந்தார்.

அந்தப் பெண்ணோ இயேசுநாதரை விடுவபவளாக இல்லை. ''தாவீதின் குமாரரே! எங்கள்மீது இரங்குங்கள்! எங்கள் மீது இரங்குங்கள்!'' என்று இரைச்சலிட்டுக்கொண்டு அவர் பின்னே சென்றாள்.

இப்படி இவள் இரைவது தங்களைக் காட்டிக்கொடுத்து விடுமோ என்று சீடர்கள் அஞ்சினார்கள். ஆகவே அந்தப்

பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்றி அனுப்பிவிடுமாறு இயேசுநாதரை வேண்டினார்கள்.

''யூதர்களிடையே மட்டும் பணிபுரிய வந்திருப்பவன் நான்!'' என்று இயேசுநாதர் அவர்களுக்குப் பதில் கூறினார்.

தாய் அன்பு மேலிட்டு நின்றதால், இயேசுநாதர் சொன்னதை அந்தப் பெண் தன் கருத்தில் வாங்கிக்கொள்ளவில்லை. ''ஆண்டவரே! என் புதல்வியைக் குணப்படுத்தும்'' என்று ஓயாது அவள் வேண்டினாள்-

விடாப்பிடியாக அவள் வேண்டுவதைக் கவனித்த இயேசுநாதர், ''அம்மா! குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய உணவை நாய்களுக்குக் கொடுப்பது நல்லதல்லவே!'' என்று பதில் சொன்னார்.

இயேசுநாதர் சொன்ன இந்தப் பதிலால் அந்தப் பொயினிசியப் பெண் மனமுடைந்து போகவில்லை. தன் கருமத்தில் கண்ணாய் இருக்கும் அவள், இயேசுநாதர் சொன்ன உபமானத்தையே சிறிது மாற்றிக் கூறி, அவரைத் தன் விருப்பத்துக்கு இணங்கச் செய்துவிட்டாள். ''குழந்தைகள் சிந்துகிற உணவை நாய்களும் சாப்பிடுவது உண்டு'' என்று நயமாக எடுத்துச் சொன்னாள்.

பொயினிசியப் பெண் சொன்ன இந்த வார்த்தைகள் மூலம், தம்பால் அவளுக்கு இருக்கும் அபார நம்பிக்கையை, இயேசுநாதர் தெரிந்துகொண்டார். ஆகவே, அவளை நோக்கி, ''மகளே! உன் புதல்வி குணம் அடைந்துவிட்டாள். நீ போகலாம்'' என்று கூறினார்.

அந்தப் பொயினிசியப் பெண் முழு நம்பிக்கைகொண்டு தன் வீடு திரும்பினாள். தன் புதல்வி குணமடைந்து இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுற்றாள்.

யூதர் குலத்தைச் சாராத இந்தப் பெண் தம்மை நம்பிய விதத்தை எடுத்துக்காட்டவே, இப்படி இயேசுநாதர் கடுமையாக நடந்துகொண்டிருக்கிறார் என்று சில ஆசிரியர்கள், இந்த நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

திருச்சபை

மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பின்னர், பொயினிசியாவிலிருந்து, இயேசுநாதர் தம் சீடர்களுடன் கலிலேயா நோக்கித் திரும்பினார்.

திரும்பும்போது ஊமையாயும் செவிடனாயும் இருக்கும் ஒருவனைக் குணப்படுத்தினார்.

வேறுபட்ட இரு கருத்துக்கள் இயேசுநாதரைப் பற்றி அப்போது மக்களிடையே நிலவின. ஒரு சாரார் இயேசுநாதர் புரியும் புதுமைகளைக் கண்டு வியந்தபோதிலும், அவரை இரட்சகராக நம்பவில்லை. ஏற்கவில்லை.

மற்றொரு சாரார் அவரை மந்திரவாதி என்றும், போலி வைத்தியன் என்றும், பேய் பிடித்து அலைபவன் என்றும் பழித்துப் பேசி, அவருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார்கள், கிளர்ச்சி செய்தார்கள்.

அதனால், தாம் ஒரு மெசியா என்று இயேசுநாதர் கூறும் போதெல்லாம், அதற்கு ஏதாவது சான்று உம்மிடம் உண்டா? என்று கேட்கலானார்கள். ஐயாயிரம் பேருக்கு இயேசுநாதர் உணவு அளித்த புதுமை போன்ற செயல்களை நேரில் காணாதவர்களும் சரி, கண்டவர்களும் சரி, அதை ஒரு சான்றாக ஏற்க மறுத்தார்கள்.

மக்களுக்குத் தாம் யார் என்பதைத் தெரியப்படுத்த இயேசுநாதர் மீண்டும் வேறு புதுமைகளைச் செய்யலானார். ஏழு ரொட்டிகளையும் சிறு மீன்கள் சிலவற்றையும் கொண்டு, நாலாயிரம் மக்களுக்கு வயிறு நிறையச் சாப்பாடு கிடைக்கும்படி செய்தார்.

இருந்தும், எதிர்ப் பிரசாரத்தின் பயனாய் மக்களில் பலர் இயேசுநாதரை நம்பவில்லை. அவர் இரட்சகர் என்பதை ஏற்கவும் பிரியப்படவில்லை.

மக்களின் மனநிலைதான் இப்படி இருந்தது என்றால், அப்போஸ்தலர்களின் மனநிலை என்ன? அவர்களில் பெரும்பாலோர் இயேசுநாதரை நம்பினார்கள் என்றும், அவர்கள் கொண்ட நம்பிக்கை உறுதி படைத்த நம்பிக்கையாக உருப்

பெறவில்லை; ஊசலாடும் நம்பிக்கையாகத்தான் அது இருந்து வந்தது.

இயேசுநாதர் இந்த மண்ணுலகுக்கு வந்து முப்பத்து இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. இன்னும் ஓர் ஆண்டுக்குப் பின்னர், அவருடைய இந்த மண்ணக வாழ்க்கை முடியப் போகிறது. அதற்குள் தாம் செய்ய வந்திருக்கும் பணியைப் பற்றி, தம் அப்போஸ்தலர்களுக்கு விளக்கி, அவர்கள் மனத்தில் தெளிவு ஏற்படச் செய்யவும், தமக்குப் பின்னர், அந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய, ஒரு திருச்சபையை நிறுவவும் இயேசுநாதர் தீர்மானித்தார். எனவே, அதற்கான காரியங்களில் இயேசுநாதர் ஈடுபடலானார்.

ஒரு நாள் இயேசு அப்போஸ்தலர்களுடன் இருந்தார். அப்போது அவர், அவர்களிடம், ''என்னைப்பற்றி ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள்? என்னை யார் என்று கூறுகிறார்கள்?'' என்று கேட்டார்.

''சிலர் தங்களை நீராட்டிய ஜான் என்கிறார்கள்; சிலர் தங்களை எலியாஸ் என்கிறார்கள். சிலர், முன் காலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்று தங்களை நினைக்கிறார்கள்'' என்று பதில் சொன்னார்கள்.



''அப்படியானால், நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார் இயேசுநாதர்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று அப்போஸ்தலர்கள் சிறிது நேரம் தயங்கினர். மனத்தினுள் இருப்பதைத் திடும் என வெளியிட அவர்களால் முடியவில்லை. சிறிது நேரத்துக்குப் பின்னர், அனைவர் சார்பாகவும் பீட்டர் பதில் சொன்னார்: ''பெருமானே! தாங்கள்

கிறிஸ்துநாதர்; நித்தியமாய் இருக்கும் இறைவனுடைய திருக்குமாரர்'' என்று கூறினர்.

இந்தப் பதிலைக் கேட்ட இயேசுநாதர், ''நீ பேறுபெற்றவன்!'' என்று பீட்டரை வாழ்த்தினர். ''இந்த உண்மையை நீயாகத் தெரிந்துகொள்ளவில்லை. இறைவனுடைய அருளினல்தான் இதை நீ தெரிந்துகொண்டிருக்கிறாய். நீ பாறை. ஆகவே, என் திருச்சபையை உன்மீது அமைக்கிறேன். நீ அங்கீகரிப்பது விண்ணிலும் அங்கீகரிக்கப்படும். வேண்டாம் என்று நீ விலக்குவது விண்ணிலும் விலக்கப்படும்'' என்று சொன்னர்.

இதுவரை, தாம் ஓர் இரட்சகர் என்பதை, இயேசுநாதர் தம் வாயால் வெளிப்படையாகக் கூறியது இல்லை. இப்பொழுது அப்போஸ்தலர்கள் அவரை கிறிஸ்து—மீட்பர் என்று ஒப்புககொண்டதும், அது உண்மை என்பதை இயேசுநாதரும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்.

இதன் பின்னர் இரட்சகருக்கு உரிய வேலையும் வாழ்வும் எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதை, அப்போஸ்தலர்களுக்கு அவர் எடுத்துக் கூறினர்.

''ஜெருசலத்தில் குருமார்களும் அதிகாரிகளும், தீர்க்கதரிசி என்றோ, இரட்சகன் என்றோ என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். என்னை நிந்திப்பார்கள். கொடுமைப்படுத்துவார்கள்; கடைசியில் கொன்றும் போடுவார்கள். ஆயினும், மூன்றும் நாளன்று நான் உயிர்த்து எழுவேன்'' என்று சொன்னர்.

''கொன்றும் போடுவார்கள்'' என்று இயேசுநாதர் சொன்ன சொற்களை அப்போஸ்தலர்களால் நம்ப முடியவில்லை. ஏற்கவும் மனம் வரவில்லை. ''ஆண்டவரே! தாங்கள் இப்படிக் கூறுகிறீர்கள். இது நடக்கக் கூடிய நிகழ்ச்சி யல்ல. நடக்கவும் முடியாது'' என்று பீட்டர் சொன்னர்.

பீட்டரின் இந்த மன நிலையை இயேசுநாதர் இதமாகக் கண்டித்தார். ''சாத்தானே!'' என்று விளித்து, ''எனக்கு இடைஞ்சலா யிராதே. இறைவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதில் கவனம் செலுத்து. மனித

ணுக்குப் பிரியமான காரியங்களை நீ செய்ய முயலாதே'' என்று எச்சரித்தார்.

திருச்சபை என்பது சுயநலத்துக்காகவும் சுகபோகத்துக்காகவும் ஏற்பட்ட நிறுவனம் அன்று. துன்பத்தையும் துயரத்தையும் ஏற்று, இறைவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதே அதனுடைய திருப்பணியாகும் என்று, அன்று தன்னுடன் இருந்த அப்போஸ்தலர்களுக்கு இயேசுநாதர் சுட்டிக் காட்டினார். இன்றும் திருச்சபையினருக்குச் சுட்டிக் காட்டுகிறார் என்று திருச்சபையினர் நம்புகின்றனர்.

இயேசுநாதர் இப்படிச் சுட்டிக்காட்டியதும், ''அங்கீகரிக்கிறோம்!'' என்பதற்கு அறிகுறியாகப் பீட்டர் பணிவுடன் நின்றார்.

யார் பெரியவன் ?

மறுமை வாழ்வு மகிழ்ச்சி நிரம்பியதாய் இருக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள், இம்மையில் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்க வேண்டியது இருக்கும் என்பதை, இயேசுநாதர் அப்போஸ்தலர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

இந்த எண்ணம் அவர்கள் உள்ளத்தில் அழுத்தமாகப் பதியும் பொருட்டும், தாம் ஓர் இரட்சகர் என்பதை அவர்கள் திட்டமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டும், இயேசுநாதர் மற்றொரு காரியத்தையும் செய்தார்.

ஒரு நாள் அப்போஸ்தலர்களில் மூவரை மட்டும்—பீட்டர், ஜான், ஜேம்ஸ்—அழைத்துக்கொண்டு, நாசரத்துக்குச் சிறிது தூரத்தில் இருக்கும் தபோர் மலைக்கு இயேசுநாதர் சென்றார்.

ஏறுவது சிரமமாய் இருந்தபடியாலும், நண்பகல் நேரமாய் இருந்தபடியாலும், அப்போஸ்தலர்கள் களைத்தும்

சோர்ந்தும் போனார்கள். மாலை நேரத்தில் மலையுச்சியை அடைந்தார்கள்.

இயேசுநாதரோ இரவில் பிரார்த்தனை செய்வது வழக்கம். அதன்படி அன்றும் மலையுச்சியில் இயேசுநாதர் பிரார்த்தனை செய்தார்.

சிறிது நேரத்துக்குப் பின்னர், இயேசுநாதர் பிரார்த்தனை செய்த இடம் ஒளி வெள்ளத்தால் பிரகாசித்தது. அரைத் தூக்கத்தில் இருந்த சீடர்கள் விழித்துக் கொண்டார்கள்.

இயேசுநாதரின் உடம்பிலிருந்து சூரியனைப் போன்ற பேரொளி ஒன்று உண்டாயிற்று. உடைகள் பளபளப்பாயும், வெண்மையாயும், பார்ப்பவர்கள் கண்கள் கூசும்படியும், பிரகாசித்தன. இயேசுநாதரின் முகமோ அளவற்ற சோபையாலும், ஒளியாலும் திகழ்ந்தது. அவருக்கு அருகே மோசஸ் ஒரு புறமும், தீர்க்கதரிசி எலியாஸ் ஒரு புறமும் நின்று, இயேசுநாதருடன் உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

ஜெருசலத்தில் இயேசுநாதருக்கு நேர இருப்பதையும், அங்கு அவர் அடையப் போகும் மரணத்தைப்பற்றியும் அவர்கள் மூவரும் பேசினார்கள்.

சீடர்களின் உள்ளத்தில் இந்தக் காட்சியால் ஒருவித பயமும் பூரிப்பும் உண்டாயின. இன்பகரமான தோற்றம், உள்ளத்தில் பூரிப்பை உண்டாக்கிற்று; அதன் விளைவு எப்படிப்பட்டதாய் இருக்குமோ என்று நினைத்தபோது, உள்ளத்தில் பயம் உண்டாயிற்று.

ஆயினும் இன்பமய உணர்ச்சி மேலிட்டு நின்றதால் அங்கேயே தங்கிவிடப் பீட்டர் எண்ணினார். ஆகவே, அவர் இயேசுநாதரை நோக்கி, ''குருநாதா! தங்களுக்கு ஒன்றும், மோசஸுக்கு ஒன்றும், எலியாஸுக்கு ஒன்றும், ஆக மூன்று கூடாரங்களை ஏற்பாடு செய்துகொண்டு, இங்கே தங்கினால் நன்றாய் இருக்குமே!'' என்று கூறினார்.

இதற்கு இயேசுநாதர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், வானம் மேகத்தால் கவிந்து போயிற்று. அப்போது

ஒரு குரல் ''எனது அன்பு மகன் இதோ! இவர் சொற்படி கேளுங்கள்'' என்று முழங்கிற்று.

இந்தக் காட்சியின்போது சீடர்கள் மூவரும் பெரிதும் அதிர்ச்சிகொண்டு தரைமீது குப்புறப் படுத்துக்கொண்டார்கள்.

சிறிது நேரம் சென்றதும், இயேசுநாதர் அவர்கள் அருகே வந்து, தமது திருக்கரத்தால் அவர்கள் மூவரையும் தொட்டார். ''எழுங்கள்; பயப்பட வேண்டாம்'' என்று சொன்னார்.

சீடர்கள் கண்விழித்துப் பார்த்தார்கள். இயேசுநாதரைத் தவிர்த்து, வேறு யாரும் அங்கு இல்லை.

அனைவரும் மலையிலிருந்து இறங்கினார்கள். ''நான் உயிர்த்து எழுவதற்கு முன்னதாக இந்த நிகழ்ச்சியை, யாரிடமும் தெரிவிக்க வேண்டாம்'' என்று தம் சீடர்கள் மூவரிடமும் இயேசுநாதர் தெரிவித்தார்.

தாம் இந்த மண்ணுலகை விட்டுச் சென்ற பின்பு, தாம் மண்ணுலகில் செய்ய விரும்பிய பணிகளைத் தொடர்ந்து செய்ய இயேசுநாதர் ஒரு திருச் சபையை நிறுவினார். பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் கொண்ட அந்தத் திருச் சபைக்கு, பீட்டர் என்பவரைத் தலைவராய் நியமித்தார்.

இந்தப் பன்னிருவரில், மூவரை மட்டும்—பீட்டர், ஜான், ஜேம்ஸ்—ஒரு மலைக்கு அழைத்துச் சென்று, திருச் சபையின் அடிப்படைப் பணிகளையும், பணி செய்வோருக்கு நேர இருக்கும் கதியையும் எடுத்துக்காட்டி, அந்த மூவரின் மனத்தை முதலில் திடப்படுத்த இயேசுநாதர் முயன்றார். பணி என்பது மெத்தென்ற பஞ்சணைமீது வீற்றிருந்து சுகபோகமாக வாழ்வது அன்று என்றும், கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையில் சென்று காரியத்தைச் சாதிக்க வேண்டியது இருக்கும் என்றும், அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

இயேசுநாதர் சொன்னதன் உட்கருத்து அப்போஸ்தலர்களுக்கு நன்கு புலப்படவில்லை. அவர்கள் மனம் மண்ணுலக வாழ்வையே நினைந்து வட்டமிடலாயிற்று. யார் பெரியவன்?

யார் சிறியவன்? எந்தப் பதவி உயர்ந்தது? எந்தப் பதவி தாழ்ந்தது? என்பது பற்றி அவர்கள் மூவரும் விவாதிக்கத் தொடங்கினார்கள். விவாதித்துக்கொண்டே, ஒரு முடிவுக்கு வர முடியாமல் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

அங்கு அவர்களைச் சந்தித்த இயேசுநாதர், சீடர்களை நோக்கி, ''வழியில் ஏதோ விவாதம் செய்துகொண்டு வந்தீர்களே? அது எதைப்பற்றி?'' என்று கேட்டார்.

பதில் சொல்ல முடியாது சீடர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள். ''யாருக்கு முதன்மை ஸ்தானம் உண்டு? என்பதுபற்றி நாங்கள் விவாதித்தோம்'' என்று சொல்ல அவர்கள் நாணப்பட்டார்கள்.

விண்ணுலகைப்பற்றியே போதனை செய்து வந்த இயேசுநாதர், எப்படி வாழ்பவன் மண்ணுலகிலும் மேன்மையடைவான் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்.

''எவன் பணிவோடும் அடக்கத்துடனும் நடந்து, தன்னைத் தாழ்ந்தவனாகச் செய்துகொள்கிறானோ, அவனே மேன்மையடைவான்'' என்று சொன்னார்.

இது சமயம் இயேசுநாதர் ஒரு குழந்தையை அன்போடு தடவிக் கொடுத்துவிட்டு, அப்போஸ்தலர்கள் பக்கம் திருப்பி, ''மனம் திருந்தி, குழந்தைகளைப்போல நீங்கள் ஆகாவிடில், விண்ணுலகப் பேறு உங்களுக்குக் கிட்டாது. குழந்தைகளுக்கு ஒப்பாக எவன் தன்னைத் தானே தாழ்த்திக்கொண்டு, அடக்கத்துடன் வாழ்கிறானோ, அவனே, விண்ணுலக அரசில் மேலான நிலையை அடைவான்'' என்று சொன்னார்.

கிறிஸ்தவ சமயத்தின் சாரத்தை எல்லாம் தமது மலைப் பிரசங்கத்தில் இயேசுநாதர் தொகுப்பாக எடுத்துச் சொல்லி இருந்தபோதிலும், அந்தச் சாரத்தின் சாரமாக, இரண்டு விஷயங்களை மட்டும் வடித்து எடுத்துத் தருகிறார் என்று எண்ண, தபோர் மலையில் அவர் புரிந்த தெய்விகக் காட்சியும் அவர் செய்த போதனையும் இடம் தருகின்றன.

1. தெய்விகத் தொண்டு என்பது சுகபோக வாழ்க்கை யன்று; அதற்காக ஒருவன் உயிரையும் துறக்கச் சித்தமாய் இருக்க வேண்டும்.

2. பெரியவனுக இருக்க விரும்புவன், தன்னைச் சிறியவனுகக் கருதிக்கொண்டு, பணிவோடும் பண்



போடும் வாழ்க்கை நடத்த வேண்டும். குழந்தைகளைப்போல் மனத்தை மாசற்றதாய் வைத்துக் கொள்ள வேண்டும்.

மாசு மறுவற்ற உள்ளம், அடக்கமும் பணிவுமுள்ள தொண்டு. இந்த இரண்டுமே, கிறிஸ்தவ சமயத்தின் உயிர் நாடி எனலாம்.

இயேசுநாதர்

(வாழ்க்கை வரலாறு)

∴

வெளிப்படுத்திக்கொண்ட காலம்

∵

இறுதி மூன்று ஆண்டுகள்

(மூன்றும் ஆண்டு)

இயேசுநாதர்
(வாழ்க்கை வரலாறு)

ஜெருசலம் நோக்கி

இரண்டு ஆண்டுகள்வரை, கலிலேயாப் பிரதேசத்திலேயே, குறிப்பாக, கப்பர்நகூம் சுற்று வட்டாரத்திலேயே, போதனைகளையும் புதுமைகளையும் இயேசுநாதர் செய்து வந்தார்.

அந்த வட்டாரத்தில் வாழும் மக்கள், பொதுவாக, முரட்டுச் சுபாவம் உடையவர்கள்! ஆன்மீகத் துறையில் அதிக அக்கறை இல்லாதவர்கள்.

பொதுமக்கள்தான் அப்படி இருந்தார்கள் என்றால், அவர் பொறுக்கி எடுத்த அப்போஸ்தலர்களில் பெரும் பாலோரும் அப்படித்தான் இருந்தார்கள்.

இடையிடையே, இயேசுநாதர் ஜெருசலம் நகருக்குச் சென்று போதனை செய்திருக்கிறார். பொயினிசியா போன்ற அன்னியப் பிரதேசங்களுக்கும் சென்றிருக்கிறார். சமாரியா நாட்டுக்கும் போய் இருக்கிறார்.

இருந்தாலும், அவர் செய்த போதனைகளும் புதுமைகளும், கப்பர்நகூம் சுற்று வட்டாரத்திலேயே பெரும் அளவில் நிகழ்ந்தன என்று சொல்லலாம். ஆனால், எதிர்பார்த்த அளவு பயன் ஏற்படவில்லை.

ஆகவே, தம் சீடர்கள் பன்னிருவரையும் உடன் அழைத்துக்கொண்டு, கலிலேயாவிலிருந்து, இயேசுநாதர், ஜெருசலம் நோக்கிப் புறப்பட ஆயத்தமானார்.

அது அக்டோபர் மாத சமயம். யூதர்கள் அந்த மாதத்தில் பிரமாதமாக ஒரு விழாவைக் கொண்டாடுவார்கள். அதற்குக் கூடாரப் பண்டிகை என்று பெயர்.

வெகு காலத்துக்கு முன்னர், மோசஸ் என்னும் தீர்க்க தரிசி தலைமையில் யூதர்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு எகிப்திலிருந்து கிளம்பினார்கள். அப்படிக் கிளம்பியவர்கள் ஒரு பாலைவனத்துக்கு வந்து, அங்கே கூடாரங்கள் அமைத்து வாழ்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியை நினைந்து, யூதர்கள் ஆண்டுதோறும் ஒரு விழாக் கொண்டாடுவார்கள். அதனால்தான் இந்தப் பண்டிகைக்குக் கூடாரப் பண்டிகை என்று பெயர்.

இந்த விழா நடக்க இருந்த சமயத்தில்தான், இயேசுநாதர் தம் சீடர்களுடன் ஜெருசலம் செல்லத் தீர்மானித்தார்.

மற்ற மக்களும் இந்த விழாவுக்கு ஜெருசலம் செல்ல ஏற்பாடு செய்தார்கள். அவர்களில் இயேசுநாதரின் உறவினர் சிலரும் இருந்தார்கள்.

அவர்கள் இயேசுநாதரை நேசிக்கவில்லை; அவர் செய்த போதனைகளையும் புதுமைகளையும் மதிக்கவில்லை; ஏற்கவில்லை. ஆயினும், நாளுக்கு நாள் இயேசுநாதரின் புகழ் விரிவடைவதைக் கண்டு, அவருடன் தொடர்புகொண்டு, ஜெருசலம் செல்ல விரும்பினார்கள். அப்படிச் சென்றால் இயேசுநாதருக்குக் கிட்டும் பெருமையில் தங்களுக்கும் பங்கு உண்டு என்பதைக் காட்டிக்கொள்ள அவர்கள் ஆசைப்பட்டார்கள். ஆகவே, அந்த உறவினர்கள் இயேசுநாதரை அணுகி, "சீடருடன் ஜெருசலத்துக்கு வந்து, தங்கள் போதனைகளை அங்கே தாங்கள் செய்யத் தொடங்கினால், அதன் பலன் பிரமாதமாய் இருக்கும்; உலகம் முழுதும் போதனைகள் பரவி, தங்களுக்குப் பெரும் புகழ் கிட்டும்" என்று சொன்னார்கள்.

புகழை விரும்பாமல், இருந்த இடத்திலேயே இருப்பது, கோழைத்தனம் என்று சுட்டிக் காட்டினார்கள்.

அவர்களின் கபட எண்ணத்தை அறிந்துகொண்ட இயேசுநாதர், "நான் இப்பொழுது ஜெருசலம் வரவில்லை; நீங்கள் செல்லுங்கள்" என்று கூறிவிட்டார்.

இதனால் உறவினர்களும் மற்றவர்களும் ஜெருசலத்துக்குப் புறப்பட்டார்கள்,

உறவினர்கள் நோக்கமும் தன் நோக்கமும் வெவ்வேறு விதமாய் இருந்தபடியால், இயேசுநாதர் அவர்களுடன் செல்ல விரும்பவில்லை. ஆகவே, சிறிது தாமதம் செய்து, பின்னர் கலிலேயாவை விட்டு, தம் சீடர்களுடன் ஜெருசலம் நோக்கிப் புறப்பட்டார் இயேசுநாதர்.

இவரைப்போல் யாரும் பேசவில்லை

தம் சீடர்களுடன் ஜெருசலத்துக்குப் புறப்பட்ட இயேசுநாதர், ஊர் ஊராகச் சென்று வழி நெடுகிலும் போதனை செய்துகொண்டு போனார். ''விண்ணுலக இராச்சியம் அண்மையில் இருக்கிறது'' என்று இயேசுநாதர் அடிக்கடி போதனை செய்தபடியால், ஜெருசலத்தில் ஒரு இராச்சியத்தை, இயேசுநாதர் நிறுவப் போவதாக மக்கள் தவறாய் நினைத்துக்கொண்டார்கள். இராச்சியம் நிறுவும் சமயத்தில் அருகே இருந்தால், தங்களுக்கும் சில வாய்ப்புகள் கிடைக்கலாம் என்று மக்கள் ஆசைப்பட்டார்கள். ஆகவே, திரள் திரளாக அவர் பின்னே செல்லத் தலைப்பட்டார்கள்.

மக்களின் மனநிலையைத் தெரிந்துகொண்ட இயேசுநாதர், அவர்களுக்குத் தமது நிபந்தனைகளைத் தெரிவிக்கலானார்.

''எனக்குச் சீடராக இருக்க விரும்புபவர்கள், தாய் தந்தையரையும் மனைவி மக்களையும் வெறுக்கத் தயாராக இருக்க வேண்டும். தமது உயிரையும் இழக்கச் சித்தமாய் இருக்க வேண்டும். எத்தகைய துயரத்தையும் ஏற்க முன் வர வேண்டும். தமது சிலுவையைத் தோளில் சுமந்து கொண்டு, என் பின்னால் வர வேண்டும். இந்த நிபந்தனைகளை ஏற்காதவன் எனக்குச் சீடனாய் இருக்க முடியாது'' என்று சொன்னார்.

மேலும் அவர் தொடர்ந்து சொன்னார்: ''கணக்கிட்டுப் பார்த்து, வரவு செலவை நிதானித்து அறிந்து, காரியத்தில் இறங்குங்கள். ஆரம்பித்துவிட்டு அரைகுறையாக நிறுத்துவது பயனற்ற வேலையாகும். உற்சாக வயப்பட்டுக் காரி

யத்தில் இறங்காதீர்கள். ஊக்கமும், முடிப்போம் என்ற உறுதியும் கொண்டு கார்யத்தில் இறங்குங்கள்'' என்று சொன்னார்.

இயேசுநாதர் இவ்வாறு கூறியதும், பின்தொடர்ந்து வந்தவர்களுக்கு உற்சாகம் குறைந்து போயிற்று. மெல்ல மெல்ல, பின்வாங்கவும் அவர்கள் தலைப்பட்டார்கள்.

கலிலேயாவிலிருந்து ஜெருசலம் செல்வதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று சுற்று வழி; மற்றொன்று குறுக்கு வழி. குறுக்கு வழியாகச் செல்ல வேண்டுமாயின், சமாரியா வழியாகச் செல்ல வேண்டும். அந்த வழியாகச் செல்ல யூதர்கள் யாரும் விரும்புவது இல்லை, ஏனெனில், யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையில் கடும் பகை நெடுங் காலமாக இருந்து வந்தபடியால், சமாரியர்களுடன் சச்சரவு நேரும் எனப் பயந்து யூதர்கள் சுற்று வழியாகப் போவார்கள்.

ஆனல், இயேசுநாதர் தம் சீடர்களுடன் சமாரியா வழியாக ஜெருசலம் செல்லப் பிரியப்பட்டார். கலிலேயா எல்லையைக் கடந்து சமாரியாவுக்குள் புக விரும்பிய இயேசுநாதர், தம் இரு சீடர்களை—ஜேம்ஸையும் ஜானையும்—சமாரியாவுக்கு அனுப்பி, சமாரியரின் கருத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினர்.

இருவரும் ஒரு கிராமத்துக்குள் சென்று விவரத்தைச் சொல்லி, தங்குவதற்கு இடம் கேட்டார்கள்.

அந்தக் கிராமவாசிகள் இடம் தர முடியாது என மறுத்துவிட்டார்கள். ஏசிப் பேசி இயேசுநாதரின் சீடர்கள் இருவரையும் கிராமவாசிகள் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

இதனல் அந்தச் சீடர் இருவரும் பெரிதும் கோபம் அடைந்தார்கள். இயேசுநாதரிடம் திரும்பி, நடந்ததை மிகுந்த ஆத்திரத்துடன் அவரிடம் கூறினர்கள். ''அண்ணலே! எங்களுக்கு அனுமதி கொடுங்கள். வானத்திலிருந்து நெருப்பை வரவழைத்து, அந்தச் சமாரியர்களை நாங்கள் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடுகிறோம்'' என்று முழங்கினர்கள்.

அவர்கள் இருவருக்கும் இயேசுநாதர் சமாதானம்

சொன்னர். "நீங்கள் பேசுவது உங்களுக்கே விளங்கவில்லை. நான் மக்களைக் காப்பாற்றுவதற்காக வந்திருப்பவன்; அழிப்பதற்காக வரவில்லை" என்று எடுத்துச் சொன்னர்.

பிறகு அவர்கள் வேறு ஒரு கிராமத்துக்குச் சென்று அங்கே தங்கினர்கள்.

இது சமயம் இயேசுநாதரைப் பற்றியும் அவருடைய சீடர்களைப் பற்றியும் செய்திகள் பரவத் தொடங்கின. இயேசுநாதர் ஜெருசலத்துக்கு வந்துகொண்டு இருக்கிருர் என்றும், பாவிகளுடன் அவர் கலந்து பழகுகிருர் என்றும், சமாரியர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார் என்றும், ஜெருசலத்துக்குச் செய்திகள் எட்டின.

இதனல் ஜெருசலத்தில் இருக்கும் குருமார்களும் அதிகாரிகளும் கலக்கம் அடைந்தார்கள்; ஆத்திரம் அடைந்தார்கள். "இயேசு இங்கே வரப் போகிருராமே! வந்தால் என்ன செய்வது?" என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள்.

"நல்ல மனிதர். அவரால் மக்கள் நன்மை அடைவர்" என்று சிலர் இயேசுநாதரை ஆதரித்துப் பேசினர்கள்.

"படிக்காத பாமரன்; அவனல் ஒன்றும் செய்ய முடியாது" என்று சிலர், அலட்சிய மனப்பான்மையோடு பேசினர்கள்.

இத்தகைய ஒரு மனப்பான்மை நிலவிய சமயத்தில் இயேசுநாதர் ஜெருசலம் நகரை அடைந்தார்.

கூடாரப் பண்டிகை இன்னும் முடியவில்லை. அதனல் ஜெருசல நகரில் மக்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது.

ஜெருசலம் நகரை அடைந்த இயேசுநாதர், கோயில் அருகே சென்று, அங்கே போதனை செய்யத் தொடங்கினர். அவரை ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும், அவர் செய்யும் போதனைகளைச் செவிமடுக்கும் பொருட்டு, அங்கே வந்து கூடினர்கள்.

"படிக்காத இந்த மனிதருக்குச் சமயத்தைப் பற்றி என்ன தெரியும்? போதனை செய்யக் கிளம்பிவிட்டாரே!" என்று, கூட்டத்தில் இருந்த ஒருவன் குத்தலாகக் கேட்டான்.

இந்தக் கேள்விக்கு இயேசுநாதர் பதில் சொன்னார்: ''நான் செய்யும் போதனைகள் எனக்குச் சொந்தமானவை அன்று. என்னை அனுப்பின பிதாவுக்குச் சொந்தமானவை அவை. எவன் சொந்தமாகப் போதனை செய்கிறானோ, அவன் புகழுக்காகவும் பெருமைக்காகவும் போதனை செய்பவன் ஆவான்'' என்று இயேசுநாதர் சொன்னார்.

''நீர் பேயால் பீடிக்கப்பட்டு இருக்கிறீர்! அதனால்தான் இப்படிப் பேசுகிறீர்!'' என்று மக்களில் சிலர் சொன்னார்கள்.

ஆதரிப்போரும் எதிர்ப்போரும் இருந்தபடியால், இயேசுநாதரை அதிகாரிகளால் உடனடியாக ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் மேற்கொண்ட முயற்சியும் பலிக்காது போயிற்று.

ஒரு முறை கோயில் அதிகாரிகள், இயேசுநாதரைப் பிடிக்க ஆட்களை அனுப்பினார்கள்.

இயேசுநாதர் போதனை செய்யும் இடத்துக்கு அவர்கள் போனார்கள். இயேசுநாதர் செய்யும் போதனையை, கூட்டத்தில் சேர்ந்து நின்று அவர்கள் செவிமடுத்தார்கள். வந்த காரியத்தை மறந்து சிறிது நேரம் சும்மா நின்றார்கள். ''இத்தகைய ஒருவரையா நாம் கைது செய்ய வந்தோம்?'' என்று நினைத்து, அந்தச் சிப்பந்திகள் திரும்பினார்கள்.

வெறும் கையோடு திரும்பி இருக்கும் சிப்பந்திகளிடம், பரிசேயரும் அதிகாரிகளும், ''நீங்கள் ஏன் இயேசுவைப் பிடித்து வரவில்லை?'' என்று கேட்டார்கள்.

''இந்த மனிதரைப்போல், இதுவரை யாரும் பேசியது இல்லை'' என்று சுருக்கமாகச் சிப்பந்திகள் பதில் சொன்னார்கள்.

''உங்களையும் அந்த ஆள் வசப்படுத்திவிட்டாரா?'' என்று, பரிசேயர்கள் குத்தலாகக் கேட்டார்கள்.

இது சமயம் நிக்கோதேமன் அங்கே இருந்தார். பரிசேயரைச் சேர்ந்த இவருக்கு இயேசுநாதரிடம் ஈடுபாடு உண்டு. ஆகவே, அவர் ''தீர விசாரியாமல், ஒருவர்மீது குற்றம் சுமத்துவதற்கும் தீர்ப்புக் கூறுவதற்கும் நமது சட்

டம் இடம் தருகிறதா என்ன? அவர் என்ன செய்கிறார் என்பதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள்'' என்று கூறினார்.

நிக்கோதமனையும் கண்டிக்க, பரிசேயர்கள் தயங்கவில்லை. ''நீரும் கலிலேயன் ஆகிவிட்டீரா? கலிலேயாவில் தீர்க்கதரிசிகள் தோன்றமாட்டார்கள் என்பது உமக்குத் தெரியாதா? பின்னே, நீர் ஏன் இப்படிப் பேசுகிறீர்?'' என்று கிண்டலாகக் கேட்டார்கள்.

'பாவம் செய்யாதவன் கல்லால் அடிக்கட்டும்'

நாளுக்கு நாள் இயேசுநாதருக்கும், ஜெருசலத்தில் இருக்கும் யூதப் பிரமுகர்களுக்கும் இடையில் வாக்குவாதங்கள் முற்றிக்கொண்டே போயின.

படித்தவர்கள், செல்வாக்குள்ளவர்கள், நல்ல பரம்பரையில் பிறந்தவர்கள், சிறந்த ஆசார சீலர்கள் என்ற இறுமாப்பும் பெருமையும் கொண்டு, பரிசேயர்கள், இயேசுநாதரை எதிர்த்தார்கள், ஆத்திரப்பட்டு இயேசுநாதரைக் கல்லால் அடிக்கவும் கிளம்பினார்கள்.

இந்த நிலையில், ஒரு நாள் இரவு, இயேசுநாதர், தமக்குப் பிரியமான ஒலிவேத்து மலைக்குத் தியானம் செய்யச் சென்றார் இந்த மலை ஜெருசலம் நகருக்கு அண்மையில் இருக்கிறது.

இரவு முழுதும் தியானம் செய்துவிட்டு, மறு தினம் காலையில், மலையிலிருந்து இறங்கி, ஜெருசலம் கோயிலுக்கு வந்தார். கோயிலின் முற்றத்தில் தங்கி, போதனை செய்யத் தொடங்கினார். மக்கள் கூட்டமாக நின்று அவர் செய்யும் போதனையைக் கேட்டுக்கொண்டு இருந்தார்கள்.

இது சமயம் சில பரிசேயரும் சதுசேயரும் கூட்டமாக இயேசுநாதரி ம் வந்தார்கள். அவர்கள் பெண் ஒருத்தியை அங்கே இழுத்துக்கொண்டு வந்தார்கள்.

வருத்தமும் வெட்கமும் நிறைந்தவளாய் தம் முகத்தைக் கைகளால் மூடி மறைத்துக்கொண்டு, நாணத்தால் அவள் குன்றிப் போய் நின்றாள்.

பிறகு இயேசுநாதரைப் பார்த்து, ''இவள் வியபிசாரம் செய்பவள். இவளை நாங்கள் பிடித்துவிட்டோம். சட்டப் படி இவளைத் தண்டிக்க வேண்டும். இத்தகைய குற்றம் இழைப்பவர்களைக் கல்லால் அடித்துத் தண்டிக்க வேண்டும் என்று மோசஸ் கட்டளையிட்டு இருக்கிறார். போதகரே! தாங்கள் என்ன அபிப்பிராயப்படுகிறீர்கள்? இவளைக் கல் லால் அடித்துத் தண்டிக்கலாமா?'' என்று கேட்டார்கள்.

''சட்டப்படி தண்டியுங்கள்'' என்று இயேசுநாதர் பதில் சொன்னால், ''பாவிகளை இரட்சிக்க வந்தவன் நான்'' என்று இயேசுநாதர் கூறுவது பொய்யாகிவிடும். ''தண்டிக்க வேண்டாம். சும்மா விட்டுவிடலாம்,'' என்று கூறினால், சட்டத்தை மதிக்கவில்லை, சம்பிரதாயத்தை மதிக்கவில்லை என்று இயேசுநாதர்மீது குற்றம் சாட்டலாம்'' என்ற கருத் தில்தான் இவ்வாறு இயேசுநாதரிடம் பரிசேயர்கள் கேட் டார்கள்.

அவர்களின் வஞ்சக எண்ணத்தை இயேசுநாதர் தெரிந்து கொண்டார். எதையோ பற்றி யோசிப்பவர்போல், சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து, பதில் ஒன்றும் சொல்லாது சும்மா இருந்தார்.

''பதில் சொல்லத் தயங்குகிறார்; சரியாக மாட்டிக் கொண்டு இயேசு தத்தளிக்கப் போகிறார்'' என்று பரிசேயர் கள் உள்ளூற மகிழ்ந்தார்கள். ஆகவே, மேலும் சிந்திக்க இடம் கொடாது, பதில் சொல்லும்படி இயேசுநாதரை அவர்கள் அவசரப்படுத்தினார்கள்.

இயேசுநாதர் நிமிர்ந்து உட்கார்ந்தார்; குற்றம் சாட்டி யவர்களையும் கூட்டத்தையும் பெண்ணையும் மீண்டும் பார்த் தார். பிறகு குற்றம் சாட்டியவர்களை நோக்கி, ''உங்களில் பாவம் செய்யாதவர்கள் முதலில் இந்தப் பெண்ணைக் கல் லால் அடிக்கட்டும்'' என்று சொன்னார்.

இப்படி இயேசுநாதர் சொன்னதும், ஒன்றும் செய்ய வகை யறியாது, அங்கிருந்து, ஒவ்வொருவராக மெல்ல மெல்ல நழுவத் தொடங்கினார்கள்.

எல்லாரும், ஒவ்வொருவராக நழுவிச் சென்ற பிறகு,

இயேசுநாதரும் அந்தப் பெண்ணுமே அங்கு இருந்தார்கள்.

அப்போது இயேசுநாதர் தலையை நிமிர்த்தி அந்தப் பெண்ணை நோக்கி, ''பெண்ணே! அவர்கள் எல்லாரும் எங்கே? உன்னை அவர்கள் தண்டிக்க வில்லையா?'' என்று கேட்டார்.

''அண்ணலே! எவரும் என்னைத் தண்டிக்க வில்லை'' என்று அந்தப் பெண் பதில் சொன்னாள்.

''நானும் உன்னைத் தண்டிக்க மாட்டேன். பயப்படாமல் இங்கிருந்து திரும்பு. இனிமேல் பாவம் செய்யாதே'' என்று புத்திமதி சொன்னார் இயேசுநாதர்.

அகக் கண்ணும் புறக் கண்ணும்

மக்கள் அனைவருமே புறக் கண்களைப் பெற்று இருக்கின்றனர். அந்தப் புறக் கண்களின் உதவிகொண்டு, நாள் தோறும் இந்த மண்ணுலகத்தைப் பார்க்கின்றனர்; அதில் வாழும் மக்களைப் பார்க்கின்றனர்; மரங்களைப் பார்க்கின்றனர்; பறவைகளைப் பார்க்கின்றனர்; விலங்குகளைப் பார்க்கின்றனர்; உயிர்கள் தோன்றுவதையும் வாழ்வதையும் மறைவதையும் பார்க்கின்றனர்.

ஆனால், இந்த உலகம் எப்படி வந்தது? இதைப் படைத்தவர் யார்? உலகத்தைப் படைத்தவர் ஒருவர் இருப்பது உண்மையானால், அவருக்கும் நமக்கும் இடையே இருக்க வேண்டிய உறவு என்ன?

இவற்றைப் பற்றி எல்லாம் பெரும்பாலான மக்கள் சிந்திப்பது இல்லை. இதுபற்றிச் சிந்தித்துச் சிந்தித்துத் திட்டமான ஒரு முடிவுக்கு வந்து, அந்த முடிவை மக்களிடையே போதனை செய்யும் பெரியவர்களை, நாம் அகக் கண் பெற்ற பெரியவர்கள் என்கிறோம்.

வேறு சில மாந்தர்கள், புறக் கண்களையும் இழந்து, இறைவன் படைத்த உலகத்தைக் காண முடியாது ஏங்கித் தவிக்கின்றனர்.

அகக் கண் இல்லாத மக்கள் அகக் கண்ணைப் பெறவும், புறக் கண்களை இழந்த மக்கள் புறக் கண்களைப் பெறவும், இயேசுநாதர் இந்த மண்ணுலகுக்கு வந்தார். அதனால் தம் மைப் பற்றிக் கூறும்போது, ''நான் இந்த உலகின் ஒளியாய் இருக்கிறேன்'' என்று இயேசுநாதர் கூறி இருக்கிறார்.

அகக் கண் திறப்பதற்கான வழிகளை இயேசுநாதர் தமது போதனைகளில் விவரித்து இருக்கிறார். அவர் ஜெருசலத்தில் இருந்தபோது, பிறவிக் குருடன் ஒருவனுக்குப் புறக் கண் களை அவர் கொடுத்த புதுமையையும், அதனால் பரிசேயர்கள் அடைந்த பரபரப்பையும் புறக் கண்களைப் பெற்றவன், அகக் கண் திறந்து, இயேசுநாதரைப் பின்பற்றியதையும் இனி நாம் கவனிக்கலாம்.

கூடாரப் பண்டிகைக்கு வந்திருந்த மக்கள் அது முடிந்து, தத்தம் ஊர் திரும்பலாயினர். அதனால் சந்தடியும் சலசலப் பும் குறைந்து போயின. பரிசேயரும் ஆத்திரம் குறைந்து, சிறிது அமைதியாய் இருந்தனர்.

இந்த நிலையில், பரிசேயர்கள் ஆத்திரமும் பரபரப்பும் அடையக் கூடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அது வருமாறு:

ஓய்வு நாளான சனிக்கிழமை யன்று, ஒரு நாள், இயேசு நாதர் தம் சீடர்களுடன் கோயில் பக்கமாக வந்தார். அப் போது குருடன் ஒருவன், கோயில் அருகே நின்று, பிச்சை கேட்டுக்கொண் டிருந்தான்.

குருடனின் அவல நிலையைப் பார்த்த சீடர்கள், இயேசு நாதரை நோக்கி, ''போதகரே! பாவம் செய்தவன் இவனா? அல்லது இவனுடைய பெற்றோரா? யார் செய்த பாவத்தால் இவன் பிறவிக் குருடனாகப் பிறந்தான்?'' என்று கேட் டார்கள்.

''இவன் குருடனாய்ப்பிறப்பதற்கு இவனோ, இவனுடைய பெற்றோரோ காரணம் அன்று. இறைவனின் பெருமைகளை வெளிப்படுத்துவதற்காகவே இவன் குருடனாய்ப் பிறந்து இருக்கிறான்'' என்று இயேசுநாதர் பதில் சொன்னார்.

பிறகு தாமதியாது எச்சிலைத் தரைமீது உமிழ்ந்து, அதைக் கொண்டு, சிறிது களிமண்ணைச் சேர்த்துப் பிசைந்து,

அந்த மண்ணை, பிறவிக் குருடன் கண்கள்மீது இயேசுநாதர் தடவினார். "எழுந்து சிலோ குளத்துக்குச் சென்று, உனது கண்களைக் கழுவிக் கொள்" என்று சொன்னார்.



அந்தக் குருடன் எழுந்து சிலோ குளத்துக்குச் சென்று, தனது கண்களைக் கழுவிக்கொண்டான்.

என்ன ஆச்சரியம்! இரண்டு கண்களும் அவனுக்கு நன்றாகத் தெரிந்தன!

அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இரண்டு கண்களை அகல விழித்து, அவன் மரங்களைப் பார்த்தான்; மலர்களைப் பார்த்தான்; மாந்தரைப் பார்த்தான். உணர்ச்சி வெள்ளம் பீறிட்டுப் பொங்க, இயேசுநாதரைக் காண அவன் ஓடோடியும் வந்தான்.

இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் தெருவில் போய்க்கொண் டிருந்தார்கள்.

குருடன் குதூகலமாக ஓடி வருவதைப் பார்த்ததும், தெருவிலுள்ள மக்கள் வியப்படைந்தார்கள். "கோயில் அருகே நின்று பிச்சை வாங்கிக்கொண் டிருந்த குருடன் அல்லவா இவன்?" என்று சிலர் கேட்டார்கள்.

"சாயலைப் பார்த்தால் அவனைப் போலத்தான் இருக்கிறது. ஆனால் இவனுக்குக் கண்கள் இரண்டும் தெரிகின்றனவே! ஆகவே இவன் அந்தக் குருடன் அல்லன்!" என்று திட்டவட்டமாகச் சிலர் சொன்னார்கள்.

தன்னைப்பற்றி மக்கள் திட்டவட்டமாகத் தவருன ஒரு முடிவுக்கு வருவதைக் கண்டு, மாஜிக் குருடன் ஆத்திரம் அடைந்தான். ''அதே மனிதன்தான் நான்!'' என்று அவனும் திட்டவட்டமாகத் தெரிவித்தான்.

இப்படி அவன் சொன்னதும், மக்கள் வியப்பில் மூழ்கிப் போனார்கள். ''அதே மனிதன்தான் நீ என்ருல், குருடனுய் இருந்த உனக்கு, கண் பார்வை எவ்வாறு வந்தது? உனது கண்களைக் குணப்படுத்தியவர் யார்?'' என்று பரபரப்புடன் அவர்கள் கேட்டார்கள்.

''இயேசு என்று ஒருவர் வந்திருந்தார். அவர்தான் எனது கண்களைக் குணப்படுத்திஞர்'' என்று அந்த மாஜிக் குருடன் பதில் சொன்னன்.

''அந்த மனிதர் இப்பொழுது எங்கே இருக்கிருர்?'' என்று மக்கள் கேட்டார்கள்.

''எனக்குத் தெரியாது'' என்ருன் மாஜிக் குருடன்.

மக்களுக்கு வியப்பும் பயமும் ஒருங்கே உண்டாயின. ''பிறவிக் குருடனை ஒரு நொடியில் குணப்படுத்தி இருக்கிருரே!'' என்று அந்த மனிதரைப் பற்றி வியப்படைந்தார்கள். ''ஓய்வு நாளான இன்று, அந்த மனிதர் குருடனுக்குப் பார்வையைக் கொடுத்து இருக்கிருரே! இந்த நிகழ்ச்சி பற்றி, பரிசேயர்கள் என்ன நினைப்பார்களோ! குணப்படுத்திய மனிதரையும் குணமடைந்த பிச்சைக்காரனையும் என்ன செய்வார்களோ!'' என்று பயந்தார்கள்.

மக்களிடையே பரிசேயர்களுக்கு மதிப்பு அதிகம் இருந்ததா? அல்லது பயம் அதிகம் இருந்ததா?

பயம்தான் அதிகம் இருந்ததாகத் தெரிகிறது.

ஆகவே, கண் பார்வை பெற்ற மாஜிக் குருட்டுப் பிச்சைக்காரனை, மக்கள் பரிசேயர்களிடம் அழைத்துப் போனர்கள்.

பரிசேயர்கள் மாஜிக் குருடனை விசாரித்தார்கள். நடந்தவற்றை அந்தக் குருடன் அப்படியே பரிசேயர்களுக்குச் சொன்னன்.

விவரம் தெரிய வந்ததும், விவாதத்தில் இறங்கி, பரிசே

யர்கள் தங்களுக்கு இடையே வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்:

"ஓய்வு நாளைக் கடைப்பிடியாத ஒருவனை, தெய்விகத் தன்மை வாய்ந்தவன் என்று நாம் ஒப்புக்கொள்ள முடியாது" என்று ஒரு பரிசேயன் சொன்னான்.

"பாவியாயின், அந்த மனிதனால் இந்தக் குருடனை எவ்வாறு குணப்படுத்த முடிந்தது?" என்று இன்னொருவன் கேட்டான்.

இப்படி வாக்குவாதம் வலுவடைந்ததே தவிர, படித்த அந்தப் பரிசேயர்களால் இயேசுநாதர் பற்றி ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆகவே, கண் பார்வை பெற்ற மனிதன் பக்கம் திரும்பி, "உனக்குப் பார்வையைக் கொடுத்த அந்த மனிதரைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டார்கள்.

"என்னைப் பொறுத்தவரையில், அவர் ஒரு தீர்க்கதரிசி!" என்று தயங்காது பதில் சொன்னான் பிச்சைக்காரன்.

பிச்சைக்காரன் சொன்ன உறுதியான பதிலைக் கேட்டதும், படித்த பரிசேயர்களின் மனம் அதை நம்ப மறுத்தது. "இவன் உண்மையில் குருடன் இல்லை. வேண்டும் என்றே ஒரு பரபரப்பை உண்டாக்கும் பொருட்டு, இப்படி ஒரு நடிப்பு நடிக்கிறான்; இவன் வடிகட்டின ஒரு புளுகன் என்பதில் சந்தேகம் இல்லை" என்று அபிப்பிராயப்பட்டனர்.

"இந்தப் பிச்சைக்காரன் கூறுவது, பச்சைப் புளுகு. இதை ருசுப்படுத்திக் காட்டிவிட்டால் மக்களுக்கு உண்மை நிலை தெரிந்து போகும்" என்று சிலர் கருதினார்கள்.

ஆகவே, மாஜிக் குருடனின் பெற்றோருக்கு ஆள் அனுப்பி, அவர்களைத் தங்கள்பால் அழைத்துவரச் செய்தனர்.

வந்ததும் அவர்களிடம் பிச்சைக்காரனைச் சுட்டிக்காட்டி, "இதோ நிற்கிறானே! இவன் உங்கள் புதல்வனா?" என்று பரிசேயர்கள் கேட்டார்கள்.

"ஆம். எங்கள் புதல்வன்தான்" என்று பெற்றோர் தெரிவித்தனர்.

"பிறக்கும்பொழுது இவன் எப்படி இருந்தான்?

இவனுக்குக் கண் பார்வை இருந்ததா? இல்லையா?'' என்று கேட்டார்கள்.

''பிறவியிலேயே இவன் குருடன்'' என்று பெற்றோர் தெரிவித்தனர்.

''அப்படியானால் இப்போது தனக்குக் கண்கள் தெரிவதாக உங்கள் புதல்வன் கூறுகிறானே! அது எப்படி?'' என்று பரிசேயர்கள் மேலும் விசாரித்தார்கள்.

துருவித் துருவி இவ்வாறு பரிசேயர்கள் விசாரித்ததும், முதிய பெற்றோர் பயந்து போனார்கள். ''ஐயன்மீர்! இவன் எங்கள் புதல்வனே என்பதிலும், பிறக்கும்போதே குருடனாக இவன் பிறந்தான் என்பதிலும் எங்களுக்குக் கொஞ்சமும் சந்தேகம் இல்லை. ஆனால், இவனுக்குப் பார்வை எப்படி வந்தது? இவனை யார் குணப்படுத்தினார்கள் என்பதை நாங்கள் அறியோம். மற்ற விவரங்களை எங்கள் புதல்வனிடமே நீங்கள் கேளுங்கள். வயது வந்து விவரம் தெரிந்த பிள்ளைதான் அவன்'' என்று சொன்னார்கள்

ஆகவே, பரிசேயர்கள் பிச்சைக்காரன் பக்கம் திரும்பி, ''உனது கண்கள் குணமடைந்ததற்காக இறைவனுக்கு நீ நன்றி செலுத்து; அவருடைய பெருமையை மறவாதே! அந்த மனிதன் பாவி என்பதை நாங்கள் அறிவோம். பாவியால் உன்னைக் குணப்படுத்தி இருக்க முடியாது'' என்று சொல்லி, அவனுடைய மன உறுதியைக் கலைக்கப் பார்த்தார்கள்.

அதற்கு அந்தப் பிச்சைக்காரன், ''அந்த மனிதர் பாவியோ, அன்றோ! அவரால் எனது கண்கள் குணமடைந்து இருப்பது நிச்சயத்திலும் நிச்சயம்'' என்று உறுதியுடன் சொன்னான்.

''எப்படிக் குணப்படுத்தினார்? அதைச் சொல்லு எங்களுக்கு'' என்று பரிசேயர்கள் அந்தப் பிச்சைக்காரனைத் தொல்லைப்படுத்தினார்கள்.

கண் பெற்ற பயனைப் பயன்படுத்தி, காட்சிகளைக் கண்டு களிக்க ஆவலோடு இருந்த அவனுக்கு, பரிசேயரின் விசாரணைத் தொல்லை ஆத்திரத்தை உண்டாக்கிற்று. ஆகவே,

அவன் பரிசேயர்களைப் பார்த்து, ''மீண்டும் மீண்டும் கேள்விகள் கேட்டு, என்னை நீங்கள் ஏன் தொல்லைப்படுத்து கிறீர்கள்? நடந்தவற்றைத்தான் உங்களுக்குச் சொல்லி விட்டேனே! மீண்டும் மீண்டும் நீங்கள் விசாரிப்பதைப் பார்த்தால், நீங்களும் இயேசுவினுடைய சீடராக விரும்பு வதுபோல் தெரிகிறதே?'' என்று குத்தலாகக் கேட்டான்.

பிச்சைக்காரன் கேட்ட இந்தக் குத்தலான கேள்வி, பரிசேயர்களுக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. அவர்கள் ஆத்திரத்தோடு, ''பாவிப் பயலே! எங்களைக் கேள்வி கேட்கும் அளவுக்கு உனக்குத் தைரியம் வந்துவிட்டதா? இங்கிருந்து அப்பால் போடா'' என்று அதட்டி, அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டார்கள்.

அந்தப் பிச்சைக்காரன் இயேசுநாதரைச் சந்தித்து, நடந் தவற்றைக் கூறி, அவருடைய திருவடிகளை வணங்கினான். ''அவர் தெய்வத் திருக்குமரன்'' என்பதைத் தான் முழுக்க முழுக்க நம்புவதாக அவரிடம் கூறினான்.

அதற்கு இயேசுநாதர், ''பார்வையை இழந்தோர் பார்வை பெறுகின்றனர்; ஆனால், பார்வையுள்ளவர்களோ குருடராகி வருகின்றனர்'' என்று குறிப்பிட்டார்.

இயேசுநாதரின் மகிழ்ச்சி

வாக்குவாதத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு, ஜெருசலம் நகரிலேயே இருக்க இயேசுநாதர் விரும்பவில்லை! ஆகவே, ஜெருசலம் நகரை விட்டுவிட்டு, அதன் சுற்று வட் டாரங்களுக்குச் சென்று, தமது போதனைகளைப் பரப்பும் எண்ணத்துடன் இயேசுநாதர் புறப்பட்டுப் போனார்.

அப்போது மூன்று மனிதர்கள் அவரைத் தனித் தனியே சந்தித்து, தாங்கள் அவருடைய சீடர்கள் ஆக விரும்புவ தாகச் சொன்னார்கள்.

முதலில் ஒரு மனிதன், சென்றுகொண்டிருக்கும் இயேசு நாதரை அவசரமாக அணுகி, ''குருநாதா! நான் தங்களின் சீடனாகி, தாங்கள் செல்லும் இடங்களுக்கு எல்லாம் நானும்

வரப் பிரியப்படுகிறேன்'' என்று சொன்னான்.

இவர் ஒரு தீர்க்கதரிசியாய் இருப்பதால் இவருடன் சேர்ந்துகொண்டால், எப்பொழுதும் சௌகரியமாய் வாழலாம் என்று அவன் கருதினான். அதனால்தான் இயேசுநாதரை அணுகி, அவன் அவ்வாறு சொன்னான்.

இப்படி அவன் சொன்னதும், இயேசுநாதர் அவனைப் பார்த்து, ''நரிகளுக்கு வளைகள் உண்டு, பறவைகளுக்குக் கூடுகள் உண்டு; ஆனால் மனுமகனுக்கோ தலைசாய்க்க ஒரு இடமும் இல்லை'' என்று சொன்னார்.



''என்னைப் பின்பற்ற விரும்புபவன், இறைவன்மீது மட்டும் நம்பிக்கைக் கொண்டு பின்பற்ற வேண்டுமே யன்றி. சௌகரியங்களை எதிர்பார்த்துப் பின்பற்றலாகாது. அந்த எண்ணத்துடன் என்னைப் பின்பற்ற விரும்புபவர் ஏமாற்றமடைவர்'' என்று குறிப்பால் உணர்த்தினார் இயேசுநாதர்.

இதற்குப் பின்னர் இயேசுநாதரின் சீடர்களில் ஒருவர் அவரிடம் வந்து, ''போதகரே! என் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடனைச் செய்து முடிக்க எனக்கு அனுமதி தாருங்கள்'' என்று சொல்லிக் கேட்டார்.

அதற்கு இயேசுநாதர், ''என் பின்னே வா! இறந்தவரை இறந்தவர்கள் புதைக்கட்டும். நீ சென்று வானுலக இராச்சியத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்'' என்று சொன்னார்.

இந்தச் சிறு உரையாடலைப்பற்றி அதிக வாக்குவாதங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அதை இங்கே விவரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், ஓர் உண்மையை அழுத்தமாக எடுத்துச் சொல்வதாக அதை நாம் கொள்ளலாம்.

ஒரு பெரிய இலட்சியத்தில் ஈடுபட்டு இருப்போருக்கு, அல்லது ஈடுபட விரும்புகிறவர்களுக்கு, அது ஒன்றில் மட்டுமே நாட்டமும் பிடிப்பும் இருக்க வேண்டுமே யன்றி, குடும்பப் பாரம் போன்ற சில்லறை இலட்சியங்களில் கவனம் செலுத்தக் கூடாது. அப்படிச் செலுத்தினால் இலட்சியத்தில்

பிடிப்புத் தளர்ந்து போகும். இந்தப் பெரிய உண்மை யையே, முக்கியமாக. மேற்சொன்ன உரையாடல் குறிப் பிடுவதாக நாம் கொள்ளலாம்.

மூன்றாவது மனிதரும் இதைப்போலத்தான் இயேசு நாதரை வேண்டினார். "போதகரே! தங்களைப் பின்பற்றி ஒழுக நான் ஆசைப்படுகிறேன். அதற்கு முன்னதாகத் தாங்கள் எனக்குச் சிறு அனுமதி தர வேண்டும். நான் சென்று என் குடும்பத்தாரிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்புகிறேன்" என்று சொல்லிக் கேட்டார்.

அதற்கு இயேசுநாதர் முன் வைத்த காலை, பின் வைப் பது கூடாது என்னும் கருத்தில் அவருக்குப் பதில்சொன்னார்: "கலப்பையைக் கையில் பிடித்துப் பின் திரும்பிப் பார்க்க விரும்பும் யாரும், விண்ணுலக இராச்சியத்தில் நுழைய முடியாது" என்று எடுத்துச் சொன்னார்.

தமக்குச் சீடர்களாய் வர விருப்பமுள்ளவர்கள், எத்த கைய மனப் பக்குவம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதை, மேலே தந்திருக்கும் மூன்று உரையாடல்களும் நமக்கு அறிவிக்கின்றன.

இதன் பின்னர், பொறுக்கி எடுத்த எழுபத்து இரண்டு சீடர்களை யூதேயாப் பிரதேசத்தில் பிரச்சாரம் செய்யும் பொருட்டு இயேசுநாதர் அனுப்பினார்.

அவர்கள் புறப்பட்டுச் சென்று, சுற்று வட்டாரங்களில், சுற்றிப் பிரச்சாரம் செய்தார்கள். பிறகு, மட்டற்ற மகிழ்ச்சி யுடன் இயேசுநாதரிடம் திரும்பி விவரத்தைத் தெரிவித் தார்கள்.

விவரம் தெரிய வந்து, இயேசுநாதரும் மகிழ்ச்சி அடைந் தார். ஆயினும் அவர்களுக்கு ஒரே ஒரு எச்சரிக்கையை மட்டும் அவர் செய்தார்.

"உங்கள் பெயரைக் கேட்டாலே பேய் பிசாசுகள் பயந்து நடுங்குகின்றனவே!" என்று சீடர்கள் மகிழ்ச்சியுடன் சொன்னதாலேயே, கீழ்வரும் எச்சரிக்கையைச் செய்ய வேண்டியதாயிற்று.

"தீய சக்திகளைக் கட்டுப்படுத்துவதில் நீங்கள் மகிழ்ச்சி

யும் பெருமிதமும் அடையக் கூடாது. வான் உலகில் இடம் கிடைக்கும் என்று மகிழுங்கள்.''

இதற்காகத் தம் தந்தையாகிய இறைவனுக்கு மனப் பூர்வமாக நன்றி செலுத்தினார் இயேசுநாதர்.

மனிதாபிமானம்

எழுபத்து இரண்டு சீடர்களும் திரும்பிய பின்பு, சட்டப் பண்டிதர் ஒருவர் இயேசுநாதரைக் காண வந்தார். முக்கிய மான சில விஷயங்கள் பற்றி, இயேசுநாதரின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு வந்திருந்தார். அவர் இயேசு நாதரை அணுகி, ''போதகரே! வான் உலகைப் பேறை அடைவதற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

சட்டப் பண்டிதர் இப்படி ஒரு கேள்வி தம்மைக் கேட்ட தற்காக இயேசுநாதர் மகிழ்ச்சி அடைந்தார். தாமும் ஒரு கேள்வியைப் பதிலுக்குக் கேட்டார். ''இதுபற்றிச் சட்டம் என்ன கூறுகிறது?'' என்று இயேசுநாதர் கேட்டார்.

''மனமுவந்து இறைவனை நாம் நேசிக்க வேண்டும். அயலாரை நம்மைப்போலவே நேசிக்க வேண்டும், இறை வனையே முதன்மையாகக் கருத வேண்டும்'' என்று அந்தப் பண்டிதர் பதில் சொன்னார்.

''நீர் சொன்ன பதில் சரியானதுதான். அதன்படி செய்வாயாக'' என்று இயேசுநாதர் சொன்னார்.

ஆனால் அவன், ''என் அயலான் யார்?'' என்று கேட் டான்.

அதை விளக்க, அடியில் வரும் கதையை இயேசுநாதர் சொன்னார்.

''ஒரு மனிதன் ஜெருசலத்திலிருந்து ஜெரிக்கோவுக்குப் போய்க்கொண் டிருந்தான். வழியில் திருடர் அவனை மறித்து, அடித்து, அவனிடம் இருப்பதை எல்லாம் பறித்துக்கொண்டு போய்விட்டார்கள், திருடர்கள் அடித்த அடியால் அந்த மனிதன் குற்றுயிராய் வழியில் கிடந்தான். யாராவது உதவி

செய்து காப்பாற்றினுலன்றி, உயிர்பிழைக்க மாட்டான் என்னும் அவல நிலையில் அந்த மனிதன் கிடந்தான்.

இது சமயம் ஒரு யூத குரு அந்த வழியாக வந்தார். வழியில் ஒரு மனிதன் அடிபட்டுக் கிடப்பதைப் பார்த்த அவர், அவனுக்கு உதவி ஒன்றும் செய்யாது அப்பால் போய்விட்டார்.

லேவியன் ஒருவனும் அந்த வழியாக வந்தான். அவனும் அடிபட்டுக் கிடக்கும் மனிதனுக்கு உதவி ஒன்றும் செய்யாது அப்பால் போய்விட்டான்.

இந்த இருவரும் ஜெருசலத்தில், கோயிலில் செய்ய வேண்டிய பணிகளைச் செய்துவிட்டு, ஜெரிக்கோவுக்குப் போய்க்கொண் டிருந்தார்கள்.

மூன்ருவதாக சமாரித்தன் ஒருவன் அந்த வழியாக வந்



தான். அடிபட்டு வழியில் கிடக்கும் மனிதன் ஒருவனைப் பார்த்ததும், அந்த மனிதன்மீது சமாரித்தன் இரக்கம் கொண்டான். அருகே சென்று, காயங்களைத் துடைத்து

மருந்து போட்டுக் கட்டிவிட்டான். தனது கோவேறு கழுதை மீது அந்த மனிதனைத் தூக்கி வைத்து, ஒரு சத்திரத்துக்கு அழைத்துப் போனன். சத்திரத்தை அடைந்ததும், கோவேறு கழுதையிலிருந்து, இறங்க உதவி புரிந்து, சத்திரத்துக்குள் அழைத்துப் போய், இருக்கச் செய்து கவனித்துக் கொண்டான்.

பிறகு, சத்திரத்துக்குச் சொந்தக்காரனிடம் இரண்டு தெனியரைக் கொடுத்து, ''இந்த மனிதரைக் கவனித்துக் கொள்ளுங்கள். மேலும் செலவு ஏற்பட்டால் திரும்பி வரும் போது செலவான பணத்தை நான் தருகிறேன்'' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு, சமாரித்தன் தனது வியாபார அலுவல்களைக் கவனிக்கப் போய்விட்டான்.

சட்டப் பண்டிதருக்கு இந்தக் கதையைக் கூறிவிட்டு. ''காயப்பட்டவனுக்கு இந்த மூவரில் யாரை அயலான் என்னலாம்?'' என்று இயேசுநாதர் கேட்டார்.

''யார் பரிவுகாட்டி உதவி புரிந்தானே, அவனே'' என்று சட்டப் பண்டிதர் பதில் சொன்னர்.

''அப்படியே நீரும் நடக்க முயலும்'' என்று புத்திமதி சொல்லி, இயேசுநாதர் அனுப்பி வைத்தார் சட்டப் பண்டிதரை.

தேசம், இனம், மொழி, மதம், முதலிய வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், சகலரையும் இறைவனின் மக்களென நினைத்து, மனிதனுக்கு மனிதர் உதவ வேண்டும். அதுவே இறைவன் விரும்புவது என்னும் உண்மையை இயேசுநாதர் இந்தக் கதை மூலம் போதித்து இருக்கிருர். அதன்படி நடக்க ஆண்டவன் மக்களுக்கு அருள்புரிவாராக!

ஒரே நல்ல வழி எது?

ஜெருசலம் வாழ் யூதர்களுக்கும் இயேசுநாதருக்கும் இடையில், பகைமை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று. மூன்று ஆண்டுகளாக இயேசுநாதர் செய்துவரும்

போதனையும் புதுமைகளும் அவர்களுக்கு ஆத்திரத்தையும் எரிச்சலையும் உண்டாக்கின. நோயாளிகளும் குருடர்களும் செவிடர்களும் முடவர்களும் இயேசுநாதரை அணுகி, குணப் படுத்திக்கொள்வதும் பிறகு அவருக்கு ஆதரவாய் இருப்பதும், பரிசேயர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பிடிக்கவில்லை. இயேசு நாதருக்கு இவ்வாறு ஆதரவும் செல்வாக்கும் பெருமையும் புகழும் அதிகரித்துக்கொண்டே போனால், தங்களுக்கு இருக்கும் செல்வாக்கும் அதிகாரமும் நாளடைவில் மங்கி மறைந்து போகும் என்று அவர்கள் அஞ்சினர். ஆகவே, அவரைப் பழிக்கவும், ஏசவும், பாவி என்று சொல்லவும் அவர்கள் தயங்கவில்லை.

இந்த நிலையில், ஜெருசலம் நகரில் இருக்கப் பிரியப் படாத இயேசுநாதர், அதன் சுற்று வட்டாரங்களில் பிரயாணம் செய்து, போதனைகளைப் புரிந்துவந்தார்.

அப்படிப் போதனை செய்துவரும் நாட்களில், ஒரு நாள், ஜெருசலம் நகருக்குத் தென் கிழக்கில் இருக்கும் ஒலிவேத்து மலைப் பக்கம் வந்தார். அந்த மலையின் கிழக்குப் பகுதியில் பெத்தனி என்று ஒரு குக்கிராமம் உண்டு. அந்தச் சிற்றூர் ஜெருசலம் நகரில் இருந்து ஒன்றரை மைல் தொலைவில் இருந்தது.

அந்த ஊரில் மார்த்தா, மேரி என்று இரு சகோதரிகள் இருந்தார்கள் அவர்களுக்கு லாசரஸ் என்று ஒரு சகோ தரன் இருந்தான். மூவரும் அன்போடும் பிரியத்தோடும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

இந்த மூவரும் இயேசுநாதரைப் பெரிதும் மதித்தார்கள். இயேசுநாதரும் அவர்கள்பால் பிரியத்துடன் இருந்துவந்தார்.

பெத்தனிப் பக்கம் வரும்போது, இயேசுநாதர் இவர்கள் இல்லத்துக்கு வந்து தங்குவது உண்டு. அதன்படி இந்த முறையும் இயேசுநாதர் அவர்கள் இல்லத்துக்கு வந்திருந்தார்.

இப்போது இயேசுநாதரின் புகழும் பெருமையும் அதி வியாபகமாய் இருந்தன. அதனால் இயேசுநாதரை உபசரிக்க மார்த்தா கவனம் செலுத்தினாள். வீட்டுக்குள் அங்கும் இங்கும் அவசர அவசரமாகச் சென்று, சமையல் செய்வ

திலும், விருந்து செய்து உபசரிப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்வதிலும் மும்முரமாக இருந்தாள்.

மேரியோ பரபரப்பு அடையாமல், இயேசுநாதரின் பாதத்துக்கு அருகே சென்று அமர்ந்து, அவர் போதனை செய்வதை ஆர்வத்தோடும் கவனத்தோடும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

தன் தங்கை மேரி தனக்கு ஒரு உதவியும் செய்யாமல், விருந்து செய்யும் காரியத்தில் ஈடுபடாமல் உட்கார்ந்து இருப்பது மார்த்தாவுக்குப் பிடிக்கவில்லை. அவள் தன் தங்கை மேரியின் குணத்தை இயேசுநாதரிடம் சொல்லிக் குறைப் பட்டுக் கொண்டாள். ''பெருமானே! எனக்கு எவ்வித உதவியும் செய்யாமல் என் தங்கை மேரி உட்கார்ந்திருப்பதைத் தாங்கள் பார்க்கிறீர்கள் அல்லவா! எழுந்து வந்து, எனக்கு அவளை உதவி செய்யச் சொல்லுங்கள்'' என்று முறையிட்டுக்கொண்டாள்.



வீட்டு வேலை, சமையல, உண்டி, உபசரிப்பு, உடை போன்ற பல துறைகளில் கவனம் செலுத்தாமல், உயர்ந்த ஒரு குறிக்கோளை மட்டும் பற்றிக்கொண்டு அதில் கவனம் செலுத்துவதே நலம் பயக்கும் என்பதை மார்த்தா உள்ளத்தில், பதியச் செய்ய வேண்டும் என்று இயேசுநாதர் விரும்பினார்.

''மார்த்தா! மார்த்தா! நீ பல காரியங்களில் தலையிட்டு வீணே கவலைப்படுகிருய்! ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் கவனம் செலுத்துவது போதுமானது. மேரி நல்ல ஒரே துறையில் மனத்தைச் செலுத்திக்கொண் டிருக்கிறுள்; அவளை வேறு துறையில் திருப்புவது கூடாது'' என்று சொன்னுர்.

காணுமல் போன ஆடு

யூதேயாப் பகுதியில் சுமார் இரண்டரை மாதங்கள் வரை பிரயாணம் செய்து, இயேசுநாதர் போதனைகள் புரிந்தார். பல புதுமைகளைச் செய்தார்.

இதன் பின்னர், இயேசுநாதர் ஜெருசலத்துக்குத் திரும்பி, முன்னைப்போலவே, தொடர்ந்து தமது போதனைகளை அங்கு செய்யத் தொடங்கினுர். ''விளக்குத் திருநாள்'' நடந்து கொண்டிருந்த சமயம் அது,

நகருக்கு இயேசுநாதர் வந்திருப்பதை யூத சமயப் பிரமுகர்கள் கவனித்துவிட்டார்கள். எப்படியாவது இந்தச் சமயம் தங்கள் வலையில சிக்கவைத்து, இயேசுநாதரைப் பிடித்துவிட வேண்டும் என்ற ஆவலுடன் அவர்கள் இருந்து வந்தார்கள்.

ஆகவே, அவர்கள் வலிந்து சென்று இயேசுநாதரை வம்புக்கு இழுத்தார்கள். ''எவ்வளவு நாளைக்குத்தான் எங்களை நீர் சந்தேகத்தில் திண்டாட விடுவீர். நீர் இரட்சகர் என்பது உண்மையாயின், அதை எங்களுக்கு வெளிப்படையாகக் கூறுவதுதானே!'' என்று தந்திரமாகக் கேட்டார்கள்.

தாம் இரட்சகர்தான் என்பதை ஒப்புக்கொண்டுவிட்டால், ஏதாவது குற்றம் கண்டுபிடித்து, சிக்கலில் மாட்டி வைத்து, இயேசுநாதரைத் திக்குமுக்காடச் செய்யலாம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

அவர்கள் எண்ணத்தைப் புரிந்துகொண்ட இயேசுநாதர், சரியான பதில் சொல்லி, அவர்களையே திக்குமுக்காடச் செய்துவிட்டார்.

''நான் சொல்லுவதை நீங்கள் நம்புவது இல்லை. என் தந்தையின் பெயரால் நான் செய்யும் காரியங்களே, நான் யார் என்பதற்குச் சான்றாய் இருக்கின்றன. நான் செய்யும் காரியங்களை நம்பாத நீங்கள் என்னைச் சேர்ந்தவர்களாய் இருக்க முடியாது. என்னைச் சேர்ந்தவர்கள் எனது குரலை அறிவார்கள்; என்னை அறிவார்கள்; என்னைப் பின்பற்றுவார்கள். நான் அவர்களுக்கு நித்திய வாழ்வு அளிப்பதால், அவர்கள் அழிய மாட்டார்கள்; என்னை விட்டும் அவர்களை யாராலும் பிரிக்க முடியாது'' என்று சொன்னார்.

நான் செய்யும் வேலைகளைப் பார்ப்பவர்களுக்கு நான் இரட்சகனா அல்லவா என்பது தானே புரியும் என்று பொருள் தரும்படி சொற்கள் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

இயேசுநாதர் சொன்ன பதிலால் யூதர்கள் ஆத்திரம் அடைந்தார்கள். ''கடவுளும் தானும் ஒன்று என்று இவர் கூறுகிறார்'' என்று குற்றம் சாட்டி, இயேசுநாதரைக் கல்லால் அடிக்க முயன்றார்கள்.

அது சமயம் கூட்டம் கூடிவிட்டபடியால், யூதர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், ஜெருசலத்தை விட்டு திரான்ஸ் ஜோர்தான் பகுதிக்கு இயேசுநாதர் போய்விட்டார்.

அந்தப் பகுதி, யூதேயாவின் வடக்குப் பகுதியாகும். சில காலம்வரை இயேசுநாதர் அந்தப் பகுதியில் தங்கி இருந்தார். பற்பல இடங்களுக்குச் சென்று அந்தப் பகுதியில் போதனைகளைப் பரப்பி வந்தார். இது சமயம், கலிலேயாப் பிரதேசம்வரை அவர் சென்றதாகத் தெரிகிறது.

ஆயக்காரர்களும் பாவிகளும் இயேசுநாதரை அணுகி, அவர் செய்யும் போதனைகளை விருப்போடு கேட்டார்கள்.

இயேசுநாதரும் அவர்களிடம் அன்போடு நடந்துகொண்டார். அவர்களுடன் சேர்ந்து உணவு உண்டார்.

இதைக் கண்டு, பரிசேயரும் சதுசேயரும் முணுமுணுத்தார்கள்.

அவர்கள் முணுமுணுப்பதை அறிந்த இயேசுநாதர், ஒரு கதை மூலம், தம் கருத்தை அவர்களுக்கு விளக்கினார்.

ஒரு ஆட்டு இடையனிடம் நூறு ஆடுகள் இருந்தன. பட்டியிலிருக்கும் அந்த நூறு ஆடுகளையும் மேய்ப்பதற்கு ஒரு நாள் காலையில் அவன் வெளியே ஓட்டிச் சென்றான்.

ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. நண் பகல் நேர சமயம். ஆடுகளை அவன் எண்ணிப் பார்த்தபோது, ஒரு ஆடு குறைந்தது. தேடித் தேடிப் பார்த்தான். அது இருக்கும் இடம் தெரியவில்லை.

''மந்தையை விட்டு, அந்த ஆடு பிரிந்து வேறு எங்காவது இருக்க வேண்டும். ஓநாய்களுக்கு அது பலியாகிவிட்டால் என் செய்வது? இருட்டுவதற்குள் அதைத் தேடிப் பிடித்தாக வேண்டும்'' என்று அந்த இடையன் நினைத்தான்.

ஆகவே மற்ற தொண்ணூற்று ஒன்பது ஆடுகளையும் விட்டு, காணுமல் போன அந்த ஆட்டைத் தேடிப் புறப்பட்டான் அவன்.

அங்கும் இங்கும் கவலையோடு தேடினான். ஆடு அகப்படவில்லை. பருந்துகள் பறந்து வட்டமிட்டன. அவன் ஆட்டைக் கூவி அழைத்துப் பார்த்தான். சிறிது நேரத்தில் பதில் சத்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டான்; தனது ஆடு கத்துவது இடையன் காதில் விழுந்தது. அவனுக்கு ஒரே மகிழ்ச்சி!

ஆடு கத்தும் பக்கம் ஓடினான்; கண்டதும் தனது தோள் மீது அந்த ஆட்டைத் தூக்கிப் போட்டுக் கொண்டான். நடக்க முடியாத ஆட்டுக் குட்டிகளுக்குக் காட்டும் சலுகையை இப்பொழுது காணுமல் போன தனது ஆட்டுக்கு, அந்த இடையன் காட்டினான். ஆட்டுக்கும் ஒரே மகிழ்ச்சி! அவனுக்கும் ஒரே மகிழ்ச்சி!



தனது பழைய மந்தையோடு சேர்ந்துகொண்டதில் ஆட்டுக்கு மகிழ்ச்சி; காணாமல்போன ஆட்டைக் கண்டுகொண்டதில் இடையனுக்கு மகிழ்ச்சி.

இந்தக் கதையைச் சொல்லிவிட்டு அதில் பொதிந்து இருக்கும் கருத்தை இயேசுநாதர் எடுத்துச் சொன்னார். ''பாவம் செய்யாதவர்களைக் காட்டிலும், பாவம் செய்த ஒருவன் மனம் திருந்தி வழிக்கு வருவானாயின், அவனைப்பற்றி வான் உலகில் பெரு மகிழ்ச்சி அடைவார்கள்'' என்று சொன்னார்.

இந்தக் கருத்தையே மேலும் வலியுறுத்துவதற்காக, மற்றொரு கதையையும் இயேசுநாதர் கூறினார். பணத்தையே பெரிதாக மதித்து வாழும் மக்களுக்கு, பணத்தை ஒரு உதாரணமாக வைத்து, தமது கருத்தை இயேசுநாதர் விளக்கினார்.

ஒரு ஊரில், சிக்கனமாகவும் கவனத்தோடும் வாழ்க்கை நடத்தும் நல்ல பெண்மணி ஒருத்தி இருந்தாள். பாடுபட்டு உழைத்து அவள் கொஞ்சம் காசு சேர்த்து வைத்திருந்தாள். பளபளப்பான பத்து நாணயங்கள் அவளிடம் இருந்தன. அவற்றை ஒரு பையில் போட்டு, முடிந்து, பத்திரமாக ஒரு பெட்டியில் வைத்திருந்தாள். அடிக்கடி சென்று, பையை எடுத்து, பணத்தைக் கையில் கொட்டிப் பார்த்து, அவள் மகிழ்ச்சி அடைவாள்.

இப்படி ஒரு முறை அவள் பார்த்தபோது, அந்தப் பத்துக் காசுகளில் ஒரு காசு, கைதவறி எங்கேயோ விழுந்து விட்டது. என்ன செய்வாள் பாவம்! அவள் பதறிப்போய் விட்டாள். ஆகவே, அந்த ஒரு பணத்தைத் தேடும் முயற்சியில் அவள் ஈடுபட்டாள். விளக்கைப் பொருத்தி, வீட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் தேடினாள்; துடைப்பத்தைப் போட்டு வீடு முழுவதும் பெருக்கிப் பார்த்தாள். தேடித் தேடி அலுத்துப் போனாலும் தேடும் முயற்சியை அவள் நிறுத்தவில்லை. கடைசியாக இரண்டு பலகைகளுக்கு இடையே அந்தப் பணம் சிக்கிக்கொண்டு இருப்பதை அவள் பார்த்தாள்! மகிழ்ச்சி தாங்க முடியவில்லை! உடனே சென்று

அந்தப் பணத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, வைக்க வேண்டிய இடத்தில் பத்திரமாக அதை அவள் வைத்தாள்.

காணாமல் போன பொருள் ஒன்று கைக்குக் கிடைத்து விட்டால், அதைப் பார்த்துப் பார்த்து, ஒருவன் மகிழ்ச்சி அடைவதை ஒப்ப, பாவி ஒருவன் திருந்தி, நல்வாழ்வு வாழ் வானாயின், அதனால் வான் உலகமே மகிழ்ச்சி அடையும் என்று கூறி, கதையை முடித்தார் இயேசுநாதர்.

ஊதாரி மகன்

இறைவன் நம் நேய தந்தை, மண்ணுலகில் வாழும் மனிதன் ஒருவன் தன் புதல்வர்களிடம் பரிவும் அன்பும் கொண்டிருப்பதைவிட, விண்ணுலகத் தந்தையான இறை வனும், மக்களிடம் பரிவோடும் கரிசனையோடும் அன்போடும் நடந்து கொள்கிறார். பாவி, கெட்டுப்போய்விட்டான் என் பதற்காக இறைவன் யாரையும் உதறிவிடுவதும் இல்லை; புறக்கணித்து ஒதுக்கித் தள்ளுவதும் இல்லை. மனம் திருந்தி, தம்மால் வரும் மகனை, மண்ணுலகத் தந்தை பரிவோடு, ஏற்று மகிழ்வதைப்போலவே, விண்ணுலகத் தந்தையும் மனம் திருந்தித் தம்பால் வரும் மாந்தரை, பரிவோடு அர வணைத்து வரவேற்கிறார்; இதில் சந்தேகமே வேண்டாம் என்பதை விளக்க, இயேசுநாதர் அருமையான சிறு கதை ஒன்று சொல்லி இருக்கிறார்; அந்தக் கதை வருமாறு:

ஒரு மனிதனுககு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். பொருள் வசதியோடும் மறற பல சௌகரியங்களோடும் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களிடம் ஆடு மாடு களுக்கும் சிப்பந்திகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் குறைவு இல்லை.

புதல்வர்கள் இருவரில், மூத்தவன் மிகவும் நல்லவன், பொறுப்புள்ளவன்; காரியங்களைக் கருத்தோடு கவனிக்கும் பண்புள்ளவன்; வயல் வரப்புகளையும் ஆடுமாடுகளையும் அவன்

அக்கறையோடு கண்காணித்து வருவான்; வம்பு அளந்து வீண்பொழுது போக்காது, எப்பொழுதும் அவன் சுறுசுறுப் புடன் இருந்து வீட்டு வேலைகளைக் கவனிப்பான்.

இளையவனோ, மூத்தவனுக்கு முற்றும் மாறுபட்ட பழக்க வழக்கங்கள் உள்ளவன்; இருந்த இடத்திலேயே இருந்து, காரியங்களைச் செய்ய அவன் விரும்புவது இல்லை. ஓடியாடிப் பரபரப்பாய்த் திரிவதில் அவனுக்குப் பிரியம் அதிகம். பட்டிக் காட்டில் இருப்பதும் வயல் வரப்புகளைக் கவனிப்பதும், சிறையில் இருப்பதைப்போன்று அவனுக்குச் சிரமமாய்த் தோன்றின. தொல்லை தரும் இந்த வாழ்வை விட்டுவிட்டு, தொலைவில் இருக்கும் நகரங்களுக்குச் சென்று, அங்கு கோலாகலமாக வாழ இளையவன் ஆசைப்பட்டான்.

ஆகவே, இளைய மகன் ஒரு நாள், தன் தந்தையை அணுகி, ''அப்பா! எனக்கு உரிய பங்கைப் பிரித்துத் தந்து விடுங்கள்'' என்று கேட்டான்.

எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. சில தினங்களுக்குப் பின்னர், இளைய மகன் விருப்பப்படி, அவனுக்கு உரிய பங்கை, அவன் தந்தை பிரித்துக் கொடுத் தான்.

தன் பங்குக்கு உரியதை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு, இளைய மகன் தூர தேசம் போனான். அங்கு போன சிறிது காலத்துக்குள் தான் கொண்டுபோயிருந்த பணம் முழுவதையும் தீய வழிகளில் அவன் செலவு செய்து தீர்த்தான்.

கையில் ஒரு காசுகூட மீதம் இல்லை. காசு தீர்ந்துபோன தோடுகூட, அவனுடைய சுகபோக வாழ்க்கையும் தீர்ந்து போயிற்று. காசு இல்லை என்பது தெரியவந்ததும், அவனோடு கூட இருந்து சுகம் அனுபவித்தவர்கள், அவனைவிட்டு விலகிப் போய்விட்டார்கள்.

இது சமயம் அந்தப் பகுதியில் பஞ்சம் வேறு தலை காட்டலாயிற்று. ஏதாவது காரியம் செய்ய வேண்டும் அல்லது பட்டினி கிடந்து சாக வேண்டும் என்ற நிலையில் இப்பொழுது இளையவன் இருந்தான் வேலை செய்வது

என்பதே அவனுக்கு வெறுப்பாய் இருந்தது. என் செய்வான் பாவம், வேலைக்கு அங்கும் இங்கும் அலைந்தான்.

அந்த ஊரில் ஒருவனிடம் சில பன்றிகள் இருந்தன. அவற்றை மேய்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, வேலை செய்து வயிறு, வளர்த்தான் இளையவன்.

இருந்தாலும் அவனுக்குப் போதிய அளவு உணவு கிடைக்கவில்லை. பன்றிகள் தின்னும் உணவு முதலாய் அவனுக்குக் கிடைக்கவில்லை.

பன்றிகளைவிடத் தனது நிலைமை படுமோசமாய் இருப்பதை இளையவன் எண்ணி எண்ணிப் பார்த்தான். வருத்தம் தாங்க முடியவில்லை. தந்தையை விட்டுப் பாகம் பிரித்துக்கொண்டு வந்ததே "தப்பு தப்பு" என்று ஏக்கமுற்று அவன் தவித்தான். "என் தந்தையாரிடம் வேலை பார்க்கும் சிப்பந்திகள்,



போதிய மட்டும் உணவு உண்டு, திருப்தியுடன் வாழ்கிறார்கள்; நானோ இங்கே பட்டினி கிடந்து சாகிறேன்" என்று வேதனைப்பட்டான். "தந்தையிடம் செல்லலாமா? கூடாதா? சென்றால் என்னை அவர் ஏற்றுக்கொள்வாரா? மாட்டாரா?" என்று பல நாட்கள் அவன் யோசித்தான். மகன் என்ற முறையில் என்னை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தால், "வேலைக்காரன் என்ற முறையிலாவது அங்கீகரித்து என்னை ஆதரித்துக் காப்பாற்றுங்கள் என்று வேண்டலாம்" என்ற முடிவுக்கு வந்து, தன் தந்தையிடம் இளைய மகன் புறப்பட்டுப் போனான்.

வயல் வேலைகளில் ஈடுபட்டு இருந்த அவனுடைய தந்தை சுற்று முற்றும் பார்த்தபோது, தொலைவில் ஏதோ ஒரு மனித உருவம் வருவது தெரிந்தது. தன் இளைய மகன் சாயல் இருப்பது தெரிந்து மீண்டும் ஒரு முறை அந்த உருவத்தை உற்றுப் பார்த்தான் தந்தை. வருபவன் தன் இளைய மகன்

தான் என்பது நிச்சயமாகத் தெரிய வந்ததும், தந்தையின் உள்ளத்தில் அன்பு பெருக்கெடுக்க ஆரம்பித்தது. ஓடோடியும் சென்று, தன் இளைய புதல்வனைக் கட்டித் தழுவிக்கொண்டு, அன்போடு அவனுக்கு முத்தம் கொடுத்தான் தந்தை.

அழுக்கடைந்த மேனியுடனும், அரைகுறை ஆடையுடனும் திரும்பி இருக்கும் தன்னை, அடையாளம் கண்டு கொண்டு, தன் தந்தை அன்போடு வரவேற்பதைக் கண்டபோது, இளைய மகனின் நெஞ்சம் உருகிவிட்டது.

''அப்பா! தங்களுக்கும் இறைவனுக்கும் விரோதமாக நடந்துகொண்டவன் நான். தங்களுடைய மகன் என்று சொல்லிக்கொள்வதற்கே எனக்கு அருகதை இல்லை'' என்று இளைய மகன் வருத்தமாகச் சொன்னான்.

தன் மைந்தனுக்குப் பதில் எதுவும் சொல்லாது, தந்தை தன் சிப்பந்திகளைக் கூவி அழைத்தான்.

சிப்பந்திகள் விரைந்து தங்கள் எஜமானனிடம் வந்தார்கள். உடனே தந்தை அவர்களிடம், ''நீங்கள் விரைவாகச் சென்று சிறந்த உடுப்புகளை எடுத்துவந்து இவனுக்குக் கொடுங்கள். விரலுக்கு மோதிரம் போடுங்கள், கால்களுக்குச் செருப்புகள் கொணர்ந்து கொடுங்கள்'' என்று தந்தை சொன்னான்.

''வேலை செய்வதை நிறுத்திவிட்டுக் கொழுத்த கன்றுக் குட்டி ஒன்றைஅடித்துச் சமைத்து,விருந்துக்குத் தடபுடலாக ஏற்பாடு செய்யுங்கள். திரும்பி வந்திருக்கும் என் புதல்வன், மகிழ்ச்சியுடன் விருந்து உண்டு திருப்தி யடையட்டும். இறந்துபோனவன் உயிர்பெற்று வந்ததைப்போல, காணாமல் போன என் மகன், இப்பொழுது என்பால் திரும்பி வந்திருக்கிறான்'' என்று சொன்னான்

அதன்படி விருந்துக்கு ஏற்பாடாயிற்று. இளைய மகன் விருந்து சாப்பிட்டான்; செவிக்கும் கண்ணுக்கும் விருந்து செய்யும் முறையில் அங்கே ஆடலும் பாடலும் நடைபெற்றன.

வேறு வேலையாகப் போயிருந்த மூத்த மகன் இது சம்பவம்

விருந்து நடைபெறும் இடத்துக்கு வந்து சேர்ந்தான். ஆடலும் பாடலும் விருந்தும் தடபுடலாக நடைபெறு வதைக் கண்டு, சிப்பந்திகளைக் கூப்பிட்டுக் காரணத்தைக் கேட்டான் மூத்த மகன்.

''தங்கள் தம்பி திரும்பி வந்திருக்கிறார். அதனால் மகிழ்ச்சி அடைந்த தங்கள் தந்தை, கொழுத்த கன்றுக்குட்டி ஒன்றை அடித்துக் கறிசமைத்து, தடபுடலாக விருந்து வைக்கிறார்'' என்று சொல்லி, மற்ற விவரங்களையும் சிப்பந்திகள் சொன்னார்கள்.

விவரம் தெரியவந்ததும், மூத்த மகன் அளவற்ற கோபம் அடைந்தான். ''கேடுகெட்ட அந்தப்பயலுக்கா என் தந்தை விருந்து வைத்து உபசரிக்கிறார்! குடும்பத்துக்கு அவமதிப்பை உண்டாக்கிய அவனிடமா பரிவு காட்டுகிறார்! மதி மயங்கித்தான் இப்படிச் செய்கிறாரா? அவர் பக்கதிலே யிருந்து நான் ஊழியம் செய்து வந்தேன்; காரியங்களைக் கவனித்துப் பொறுப்புடன் நடந்துகொண்டேன். அப்படி இருக்கும்போது, அந்தப் பயலிடம் அவர் இவ்வளவு பிரியம் காட்டுகிறாரே!'' என்று கோபத்துடன் இருந்தான்.

விருந்து நடக்கும் அறைக்குள் நுழையாது வெளியே நின்றுகொண் டிருந்தான்.

மூத்த மகன் கோபத்துடன் இருக்கிறான் என்பது தெரிய வந்து, தந்தை வெளியே வந்தான். அவனிடம் நயந்த பாவனையில் பேசத் தொடங்கினான்.

மூத்த மகனோ தன் தந்தை சொன்னதைக் காதில் வாங் கிக்கொள்ளாது, தனது உள்ளக்கிடையை மளமள வென்று அவனிடம் வெளியிட்டான். ''அப்பா! பல ஆண்டுகளாகத் தங்கள் அருகே இருந்து, தங்களுக்கு நான் பணிவிடை செய்து இருக்கிறேன்; தங்களை மீறாமல் கட்டுப்பட்டு நடந்து இருக்கிறேன். அத்தகைய எனக்குத் தாங்கள் இதுவரை விருந்து வைத்தது இல்லை. ஆனால், விலைமாதரோடு பொழு தைக் கழித்து, பொருளைத் தோற்றுவிட்டு வந்திருக்கும் தங்கள் புதல்வனைக் கண்டதும் கொழுத்த கன்று ஒன்றை அடித்துக் கறி சமைத்து விருந்து வைக்கிறீர்கள். இது

நியாயமா?'' என்று கேட்டான்.

தன் மூத்த மகனுக்குத் தந்தை சமாதானம் சொன்னான். ''மகனே! எப்பொழுதும் நீ என் கூடவே இருப்பவன்; ஆனால், உன் தம்பியோ செத்துப் பிழைத்துத் திரும்பி வந்து இருப்பவன்'' என்று கூறினான்.

• • •

கெட்டுப் போனோம் என்பதற்காக யாரும் இறைவனை அணுக அஞ்ச வேண்டாம். முன் செய்த பாவங்களுக்காக மனம் திருந்தி வருந்தியும், இனிப் பாவங்கள் செய்வது இல்லை என்ற உறுதியுடனும், பாவி ஒருவன் இறைவனை அணுகுவானாயின், இறைவன் அவனைத் தன் சொந்த மகன்போலப் பாவித்து வரவேற்பார் என்பது இந்தக் கதையின் உட்பொருள் ஆகும்.

கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளில், அதி முக்கியமான ஒரு கோட்பாட்டை, இந்தக் கதை அருமையாய் விளக்குகிறது.

பணக்கார வாலிபன்

கூடாரப் பண்டிக்கைக்கு ஜெருசலம் வந்த இயேசுநாதர், இரண்டு மாதங்கள்வரை அங்கு தங்கிவிட்டு, பின்னர், திரான்ஸ் ஜோர்தான், சமாரியா, கலிலேயா ஆகிய பகுதிகளுக்குப் போனார்; போன இடங்களில் வாக்குவாதங்கள் புரிந்தார்; நோயாளிகளைக் குணப்படுத்தினார்; போதனைகள் செய்தார்; தமது கருத்துகளை விளக்குவதற்குக் கதைகளைச் சொன்னார்.

ஒரு முறை ஒரு இடத்தில் இயேசுநாதர் வந்துகொண்டிருந்தபோது, ஆசி பெறும் பொருட்டு, குழந்தைகள் சிலரை அவரிடம் அழைத்து வந்தார்கள்.

அப்போது சீடர்கள், குழந்தைகளை இயேசுநாதரிடம் கொண்டு செல்ல வேண்டாம் என்று சொல்லித் தடுத்தார்கள்.

இதை இயேசுநாதர் விரும்பவில்லை. "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்; அத்தகையவர்களுக்கே வான் உலக இராச்சியம் உண்டு; ஆதலால் அவர்களைத் தடைப் படுத்தாதீர்கள். குழந்தை உள்ளத்தோடு வான் உலக இராச்சியத்தை ஏற்காதவர்களால், வான் உலக இராச்சியத் துக்குள் புக முடியாது" என்று சொன்னார்.

பின்பு குழந்தைகளைத் தம் அருகே வரச் செய்து, அவர் களை ஆசீர்வதித்தார் இயேசுநாதர்.

குழந்தைகளை ஆசீர்வதித்துவிட்டு, அந்த இடத்தை விட்டு, இயேசுநாதர் புறப்பட இருந்த தருணத்தில், வாலி பன் ஒருவன் ஓடோடியும் வந்து, அவருடைய காலடியில் வீழ்ந்தான். "நல்ல போதகரே! விண்ணுலக வாழ்வைப் பெற ஒருவன் என்ன என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"விண்ணுலகப் பேறை அடையும் விருப்பம் உனக்கு இருப்பின், பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடித்து ஒழுகு" என்று பதில் சொன்னார் இயேசுநாதர்.

அதற்கு அந்த வாலிபன், "போதகரே! அவற்றை நான் கடைப்பிடித்து வருகிறேன் கட்டளைகளை மீறாமல் நான் வாழ்க்கை நடத்துகிறேன். இருந்தும் என் வாழ்க்கையில் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாகத் தோன்றுகிறது" என்று பதில் சொன்னான்.

ஆவலோடும் ஆர்வத்தோடும் அந்த வாலிபன் இவ்வாறு தெரிவித்ததும், இயேசுநாதர் அவனை அன்போடு நோக் கினார். "வாலிபனே! உன்னிடம் ஒரு குறை இருக்கிறது. பொருள்கள் அனைத்தையும் விற்று, ஏழை எளியவர்களுக்குக்கு வழங்கிவிடு" என்று சொன்னார்.

இப்படி இயேசுநாதர் சொன்னதும் ஆர்வத்துடன் வந்திருந்த அந்தப் பணக்கார வாலிபனின் முகம் வாட்ட மடைந்துவிட்டது. பணத்தை இழக்க விருப்பம் இல்லாத படியால், அந்த வாலிபன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு, வந்த வழியே போய்விட்டான்.

வாலிபன் போன பின்பு, இயேசுநாதர் தம் சீடர்களை

நோக்கி, ''செல்வம் படைத்தவர்களுக்கு விண்ணுலக இராச்சியம் பெறுவது எவ்வளவு சிரமமாய் இருக்கிறது. பார்த்தீர்களா?'' என்று கூறினர்.

இயேசுநாதர் இப்படிச் சொன்னதும் சீடர்கள் பெரிதும் வியப்படைந்தார்கள்.

இதைக் கவனித்த இயேசுநாதர் அவர்களிடம், ''சீடர்களே! விண்ணுலக இராச்சியத்தை அடைவது எளிதான காரியம் அன்று என்பதை நீங்கள் தெரிந்துகொண்டீர்களா? ஊசியின் காதில் ஒட்டகம் எளிதில் நுழையக் கூடும். ஆனல், பணக்காரன் விண்ணுலக இராச்சியத்தில் எளிதில் நுழைய முடியாது'' என்று சொன்னர்.



இந்த நிகழ்ச்சி திரான்ஸ் ஜோர்தான் பகுதில் நடந்தது. இதற்குப் பின்னர், சிறிது காலம்வரை இயேசுநாதர் அந்தப் பகுதியில் தங்கி இருந்ததாகத் தெரிகிறது.

இறந்தவன் பிழைத்தான்

இயேசுநாதர் ஜோர்தான் நதித்தீரத்தில் இருந்த சமயம், லாசரஸ் என்னும் வாலிபன் ஒருவன் பெத்தனியில் மரணப் படுக்கையில் கிடந்தான்.

இவன் இயேசநாதரைப் பெரிதும் நேசித்தவன்; தங்கள் தம்பி மரணப் படுக்கையில் கிடப்பதை அறிந்த அவனுடைய சகோதரிகள் மார்த்தாவும் மேரியும் பெரிதும் வருந்தினர்கள். லாசரஸ் மரணப்படுக்கையில் கிடக்கும் செய்தியை ஒரு ஆளை அனுப்பி இயேசுநாதருக்கு அறிவிக்கச் செய்தார்கள், இயேசுநாதருக்கு விவரம் தெரியவந்தால், தங்கள் தம்பி லாசரஸை அவர் மரணத்திலிருந்து காப்பாற்றுவார் என்று மார்த்தாவும் மேரியும் முழுக்க முழுக்க நம்பினர்கள்;

ஆகவே, அனுப்பிய ஆள்மூலம் "கர்த்தரே! தாங்களே நேசிக்கும் லாசரஸ் நோயுற்று இருக்கிறான்" என்று சொல்லி அனுப்பினார்கள்.

அந்த ஆள் இயேசுநாதரிடம் சென்று லாசரஸ் மரணப் படுக்கையில் கிடக்கிறான் என்னும் விவரத்தைத் தெரி வித்தான்.

அதற்கு உடனே இயேசுநாதர், "இந்த நோயினால் ஆண்டவனுடைய பெருமையும் மனித குமாரனுடைய பெருமையும் வெளிப்படப் போகின்றன" என்று பதில் சொன்னார்.

விவரம் தெரியவந்ததும், இயேசுநாதர் தங்கள் இல்லத் துக்கு விரைவில் வந்து, தங்கள் தம்பிக்கு இருக்கும் நோயைக் குணப்படுத்துவார் என்று நம்பி இருந்தார்கள். ஆனால், இயேசுநாதரோ இரண்டு நாட்கள்வரை பெத்தனிப் பக்கம் போகவில்லை.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், நம் சீடர்களை நோக்கி "வாருங்கள். நாம் யூதேயாவுக்குப் போகலாம்" என்று சொன்னார் இயேசுநாதர்.

யூதேயாவுக்குப் போனால் ஆபத்து நேரலாம் என்று சீடர்கள் அஞ்சினர். ஆகவே, அவர்கள் இயேசுநாதரை நோக்கி, "பெருமானே! யூதர்கள் தங்களைக் கல்லால் அடிக்க வரவில்லையா? மீண்டும் அங்கு போனால் ஏதும் ஆபத்து நேராமல் இருக்குமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு இயேசுநாதர், "நம் நண்பன் லாசரஸ் தூங்கு கிறான். நாம் பெத்தனிக்குச் சென்று, லாசரஸை எழுப்பு வோம்" என்று சொன்னார்.

"கர்த்தரே! லாசரஸ் தூங்குகிறான் என்றால் நல்லது தானே! ஆகவே, நாம் அங்கே போக வேண்டிய அவசியம் இல்லை" என்று சீடர்கள் மறுத்துச் சொன்னார்கள்.

சீடர்களின் மனப்போக்கை மாற்றும் வகையில் இயேசு நாதர் பேசலானார். "உங்கள் பொருட்டாகத்தான் இது வரை யூதேயாவுக்கு நான் போகாமல் இருந்தேன்; இப்போது நாம் அவசியம் அங்கே போயாக வேண்டும்; ஏனெனில்,

லாசரஸ் இறந்து போனான்'' என்று வெளிப்படையாகவே அவர்களுக்குப் புரியும்படி இயேசுநாதர் சொன்னார்.

லாசரஸ் இறந்து போனான் என்று இயேசுநாதர் உறுதியாகக் கூறியதும், சீடர்கள் திடுக்கிட்டார்கள். தங்கள் நண்பன் ஒருவன் இறந்து போனதை அறிந்து, பெரிதும் வருந்தினார்கள்.

ஜெருசலத்தில் இருக்கும் பரிசேயர்களும் அதிகாரிகளும் இயேசுநாதரையும் அவரைச் சார்ந்தவர்களையும் பெரிதும் வெறுக்கிறார்கள். அத்தகைய இடத்துக்குப் போனால் கட்டாயம் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்று சீடர்கள் கவலைப்பட்டார்கள். இயேசுநாதரோ பிடிவாதமாக, பெத்தனிக்குப் போக வேண்டும் என்று சொன்னார்.

இயேசுநாதரின் சீடர்கள் பன்னிருவர். அவர்களில் தாமஸ் என்பவர் ஒருவர். அவர் எதையும் ஆற அமரச் சிந்திப்பவர்; ஒரு முடிவுக்கு வந்த பின், அதைப்பற்றிப் பிறகு சிந்தித்துக்கொண்டிராமல் காரியத்தில் இறங்கும் மனப்பாங்கு உள்ளவர் அவர்.

இயேசுநாதருக்குப் பலத்த எதிர்ப்பு ஜெருசலத்தில் இருக்கும் என்பதைத் தாமஸ் அறிவார்; உயிருக்கும் ஆபத்து நேரலாம் என்று அவர் திடமாக நம்பினார். ஆகவே, அவர் மற்ற சீடர்களை நோக்கி, ''வாருங்கள். உயிரைத் துறக்கும் பொருட்டு, நாமும் இவருடன் சேர்ந்து ஜெருசலம் செல்வோம்'' என்று சொன்னார்.

தாங்கமுடியாத வேதனை உள்ளத்தில் இருந்தபோதிலும், மற்ற சீடர்களும் தாமஸ் என்பவரின் கூற்றை ஆதரித்தார்கள். அவசியமாயின் உயிரை இழப்பதற்கும் சீடர்கள் சித்தமாய் இருந்தார்கள்.

ஆகவே, எல்லாரும் அங்கிருந்து புறப்பட்டார்கள். பெத்தனி வந்து சேர்ந்தார்கள்.

''இயேசுநாதர் வருகிறார்! இயேசுநாதர் வருகிறார்!'' என்னும் சொற்கள் காதில் விழுந்தன. உடனே மார்த்தா, வீட்டைவிட்டு வெளியே வந்து, இயேசுநாதரை எதிர்கொண்டு சந்திக்கச் சென்றாள். மேரியோ வீட்டுக்குள்ளேயே

இருந்து கவலைப்பட்டுக்கொண் டிருந்தாள்.

இயேசுநாதரைச் சந்தித்த மார்த்தா, அவரிடம் ''கர்த்தரே! தாங்கள் இங்கு இருந்திருந்தால், என் தம்பி லாசரஸ் இறந்திருக்க மாட்டான்; ஆயினும், தாங்கள் இப்பொழுது பிதாவிடம் வேண்டினால், அவர் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பார்'' என்று சொன்னாள்.

இப்படி மார்த்தா வருந்துவதைக் கவனித்த இயேசுநாதர், ''உன் தம்பி உயிர் பெற்று எழுவான்!'' என்று அவளுக்கு ஆறுதல் சொன்னார்.

மார்த்தாவால் இந்த வார்த்தைகளை நம்ப முடியவில்லை. ''இறுதித் தீர்ப்பு நாளன்று என் தம்பி உயிர்த்து எழுவது எனக்குத் தெரியும்'' என்று துயரத்தோடு மார்த்தா பதில் சொன்னாள்.

உடனே, இயேசுநாதர் மார்த்தாவை உற்று நோக்கினார்! ''உயிர்த்து எழுதலும் உயிரும் நானே'' என்று உறுதியுடன் அவர் கூறினார்.

மேலும் தொடர்ந்து பேசினார்: ''இறந்து போயினும் என்னை நம்புபவர்கள், உயிருடன் இருப்பார்கள். என்னை நம்பி உயிர் வாழ்பவர்களும் இறந்து போக மாட்டார்கள். இதை நீ நம்புகிறாயா?'' என்று கேட்டார்.

''தாங்கள் இறைவனுடைய திருக்குமரன் என்பதையும், தாங்களே உலகின் இரட்சகர் என்பதையும் நான் நம்புகிறேன்'' என்று மார்த்தா பதில் சொன்னாள்.

பிறகு அவள் தன் தங்கையிடம் திரும்பிப் போய், ''மேரி! இயேசுநாதர் வந்திருக்கிறார். அவர் உன்னைக் கூப்பிடுகிறார்'' என்று கூறினாள்.

துரிதமாக எழுந்து, மேரி, இயேசுநாதரைக் காணச் சென்றாள்; இயேசுநாதர் ஊருக்குள் நுழையவில்லை. கிராமத்தின் எல்லையில், மார்த்தாவைச் சந்தித்த இடத்திலேயே அவர் இன்னும் இருந்தார்.

மேரி அவசரமாக எழுந்து போவதைக் கண்டதும், வீட்டில் இருந்த மற்றவர்களும் எழுந்து மேரியுடன் சென்றார்கள். ''லாசரஸின் கல்லறைக்குச் சென்று மேரி அழப்போகிறாள்''

என்று கருதி, மற்றவர்களும் எழுந்து மேரி கூடப் போனார்கள்.

அருகே சென்றதும், பொருமிப் பொருமி அழுது, மேரி இயேசுநாதரின் பாதங்களில் வீழ்ந்தாள். ''கர்த்தரே! தாங்கள் இங்கு இருந்தால் என் தம்பி இறந்து போயிருக்க மாட்டான்'' என்று சொல்லிப் புலம்பினாள்; கதறி அழுது கண்ணீர் உகுத்தாள்.

மேரி அழுவதைக் கண்டதும், அவளுடன் கூட வந்திருந்த மற்றவர்களும், கதறி அழுதார்கள்.

துயரம் மேலிட்டுக் கதறி அழும் மேரியையும் மற்றவர்களையும் பார்த்த இயேசுநாதர் அவர்களை நோக்கி, ''லாசரலை எந்த இடத்தில் புதைத்து இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''வாருங்கள் காட்டுகிறோம்'' என்று துயரத்துடன் அவர்கள் பதில் சொன்னார்கள்.

இயேசுநாதரும் கண்ணீர் உகுத்து அழுதார்.

இயேசுநாதர் அழுவதைப் பார்த்த மக்கள், ''லாசரனிடம் இவருக்கு எவ்வளவு அன்பு பார்த்தீர்களா!'' என்று சொன்னார்கள்.

''பிறவிக் குருடனுக்குப் பார்வையைக் கொடுத்தஇவர், மனது வைத்தால், இறந்துபோன இவனையும், உயிர்த்து எழச் செய்வது, இவருகக்கு ஒரு பிரமாதமா?'' என்று பேசிக் கொண்டார்கள்.

இயேசுநாதர் கல்லறையை அடைந்தார்.

குன்றின் சரிவில் குகைபோல் குடைந்து, அதற்குள் லாசரலைப் படுக்க வைத்து அடக்கம் செய்து, மேலே அந்தக் குகைக் குழியைக் கல்லால் மூடி இருந்தார்கள்.

அருகே சென்றதும் இயேசுநாதர், ''கல்லறையை மூடியிருக்கும் கல்லை அப்புறப்படுத்துங்கள்'' என்று சொன்னார்.

உடனே,மார்த்தா குறுகிட்டு,''அண்ணலே! லாஸரசைப் புதைத்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன. உடல் அழுகத் தொடங்கி இருக்கும். கல்லை, அப்புறப்படுத்தினால் நாற்றமடிக்கும்'' என்று கூறினாள்.

"நம்பிக்கை இருந்தால் இறைவனின் மகிமையை நீ காணலாம் என்று உனக்கு நான் சொல்ல வில்லையா?" என்று கேட்டார் இயேசுநாதர்.

இயேசுநாதரின் விருப்பத்துக்கு இணங்க, அங்கு இருந்த வர்கள், லாசரஸின் கல்லறையை மூடியிருந்த கல்லை அப் புறப்படுத்தினார்கள்.

உடனே இயேசுநாதர் பிதாவிடம் பிரார்த்தனை செய் தார். "தந்தையே! எனது பிரார்த்தனைக்கு இதுவரை செவிசாய்த்த உமக்கு எனது நன்றி! எப்பொழுதும் எனது பிரார்த்தனைக்கு செவி சாய்க்கிறீர். ஆயினும் உம்மிடமிருந்து வந்த வன் நான் என்பது இங்கே குழுமி நிற்கும் மக்களுக்குத் தெரிய வேண்டும்" என்று சொல்லி, மௌன மாகப் பிரார்த்தனை செய்தார்.



பிறகு கல்லறையை நோக்கி, "ஏ லாசரஸ்! எழுந்து வெளியே வா!" என்று இரைந்து கூவிஅழைத் தார்.

இயேசுநாதர் இவ் வாறு அழைத்ததும் வாலிபன் கல்லறையிலிருந்து வெளியே வந்தான். அவனுடைய கைகளும் கால்களும் துணியால் கட்டப்பட்டு இருந்தன; முகத்தையும் துணியால் சுற்றிக் கட்டி இருந்தார்கள்.

"இவன்மீது இருக்கும் துணிகளை அகற்றுங்கள்" என்று இயேசுநாதர் சொன்னார்.

அவ்வாறே செய்தார்கள்.

இந்த நிகழ்ச்சி சிலருக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று: சிலருக்கு ஆத்திரத்தை உண்டாக்கிற்று.

ஆத்திரப்பட்டவர்கள், இந்த நிகழ்ச்சியைப் பரிசேயர் களிடம் தெரிவிக்க ஜெருசலத்துக்கு ஓடினார்கள்.

அதிர்ச்சி அடைந்தார்கள்

இயேசுநாதர் இதுவரை மூன்று பேர்களை உயிர்ப்பித்து இருக்கிறார். ஜைரஸ் என்னும் சிறுமி, செத்துப் படுக்கைமீது கிடந்தவளை முதலில் உயிர்ப்பித்தார். பிறகு பாடையில் வைத்துப் புதை குழியில் அடக்கம் செய்ய எடுத்துப் போன வாலிபனை, வழியில் சந்தித்து, அவனை உயிர்த்து எழச் செய் தார். இப்பொழுது மூன்றாவதாக நான்கு நாட்கள் முன்பே கல்லறையில் அடக்கம் செய்யப் பெற்ற லாசரஸை இயேசு நாதர் உயிர்த்து எழச் செய்தார்.

இந்த மூன்று நிகழ்ச்சிகளிலும் புதுமை இருக்கிறது. எனினும் அவர் மூன்றாவதாகச் செய்த புதுமையே, யூதரிடை பெரும் கிளர்ச்சியை உண்டாக்கி, இயேசுநாதரின் மண்ணுலக வாழ்வு முடிவு பெறுவதற்கு ஒரு காரணமாய் இருந்தது. அது எப்படி என்பதை இனி நாம் பார்க்கலாம்.

முன்பு நடந்த இரு நிகழ்ச்சிகளும், ஜெருசலத்துக்கு தூரத்தில் நடந்தவை. யூத குருமார்களும் அதிகாரிகளும் இந்த இரு நிகழ்ச்சிகளையும் பற்றி, செய்தி என்ற அளவில் மட்டும்தான் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்ததால், அவற் றைப் பற்றி அவர்கள் அதிகமாகச் சிந்திக்கவும் இல்லை; அவற் றைப் பெரிதாகப் பொருட்படுத்தவும் இல்லை; அக்கறை காட்டவும் இல்லை. ஆச்சரியப்படவும் இல்லை.

ஆனால், லாசரஸ் உயிர் பிழைத்த சம்பவமோ சாதாரண மான சம்பவம் அன்று; இறந்து, நான்கு நாட்களுக்கு முன்னர் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட ஒருவன், உயிர் பெற்று எழுந்து வந்து, பலர் காண இயேசுநாதரின் பெரு மையை மக்களிடையே பறைசாற்றுவதுபோல, நடமாடு

கிறான். இந்த நிகழ்ச்சியைப் பொய் என்றோ, புரட்டு என்றோ, அதட்டிப் பேசி, மக்களின் வாயை மூட முடியாது.

விவரம் தெரிய வந்ததும், ஜெருசலத்தில் வாழும் பரிசேயர்களும் சதுசேயர்களும் கலங்கிப் போனார்கள். இனி அசட்டையாய் இருப்பது தங்கள் வாழ்வுக்கும் மதிப்புக்கும் ஆபத்து என்று அஞ்சினார்கள். ஆகவே, தங்களின் முக்கிய சபையான சனதரீம் சபையைக் கூட்டினார்கள். முக்கியமான ஒரு விஷயம்பற்றி முடிவெடுக்க வேண்டியது இருந்தபடியால், பிரதான யூத ஆசாரியன் கைபாஸ் என்பவனும் இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தான்.

''இந்த நாசரத்து ஊர்க்காரன் பல புதுமைகளைச் செய்கிறான்; நாளுக்கு நாள் அவனுடைய செல்வாக்கும் புகழும் அதிகரித்து வருகின்றன; இனியும் நாம் சும்மா இருந்தால் நமது பிழைப்புக் கெட்டுப் போகும்; மதிப்புக் குறைந்தால் நாம் அழிந்துபோக நேரும். அதன் பின்னர் ரோமர்களும் நம்மை மதிக்க மாட்டார்கள்; கோயிலின் கண்ணியமும் வருவாயும் குறைந்து போகும். அதனால் நம் நாடே பாழடைந்து போகும்'' என்று ஆத்திரப்பட்டார்கள்.

''சான்று உண்டா? சான்று உண்டா?'' என்று இயேசு நாதரைத் தொந்தரவு செய்து வந்த அவர்கள், சான்றை நேரடியாகக் காட்டியதும், அதிர்ச்சி அடைந்து போனார்கள். இயேசுநாதர் காட்டிய சான்றை நம்பாமல், அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யத் தொடங்கினார்கள்.

மன அமைதி யிழந்து கூட்டத்தில் இருப்பவர்கள் தவிப்பதை, பிரதான ஆசாரியன் கைபாஸ் தெரிந்துகொண்டான். அவன் கூட்டத்தினரை நோக்கி, ''நாட்டு மக்கள் அழிய நேரும் என்று நீங்கள் ஏன் அவதிப்படுகிறீர்கள்? நாட்டு மக்கள் அனைவரும் அழிவதற்குப் பதிலாக, ஒரு மனிதன் அழிந்து போவது உசிதமாய் இராதா?'' என்று தாடியைத் தடவிக்கொண்டே தனது கருத்தைப் பிரதான ஆசாரியன் வெளியிட்டான்.

"நாட்டு மக்கள் அனைவருமே அழிவதற்குப் பதிலாக, ஒரு மனிதனைப் பலிகொடுப்பது குற்றமாகாது" என்னும் தோரணையில் பிரதான ஆசாரியன் பேசியதும், மக்கள், தக்க வழி தெரிந்துவிட்டதுபோல் சிறிது ஆறுதல் அடைந்தார்கள். இயேசுநாதரைப் பிடித்து, அவரைக் கொல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள்.

இப்படி ஒரு ஏற்பாட்டைப் பரிசேயர்கள் செய்கிறார்கள் என்பது இயேசுநாதருக்குத் தெரியாமல் இருக்க முடியுமா?

விவரம் தெரிய வந்ததும், இயேசுநாதர் ஜெருசலம் நகர வட்டாரத்தில் சஞ்சரிக்கவில்லை. தம் சீடர்களை அழைத்துக் கொண்டு, ஜெருசலம் நகருக்கு வடக்கே இருபது மைல் தொலைவில் இருக்கும் ஏபிரேம் என்னும் நகருக்கு இயேசுநாதர் போய்விட்டார். மீண்டும் ஜெருசலம் திரும்பும்வரை, இந்தப் பிரதேசத்திலேயே இயேசுநாதர் தங்கி இருந்தார்.

பதவி மோகம்

பிரதான ஆசாரியன் கைபாஸ் சொன்ன யோசனைப்படி காரியத்தைச் செய்வது என, சதனரீம் சபையில் முடிவு செய்தார்கள். "நாசரத்தானை — இயேசுவை — கைது செய்ய வேண்டும். அவன் இருக்கும் இடம் தெரிய வந்தால் உடனே அதை எங்களுக்குத தெரிவிககவேண்டும்" என்று பரிசேயர்களும் பிரதான ஆசாரியனும் உத்தரவிட்டு இருந்தார்கள்.

இயேசுநாதரோ, தம் சீடர்களுடன் எபிரேம் பகுதியில் தங்கி இருந்தார். சில நாட்கள் கழிந்தன. பாஸ்கு விழா நெருங்கிககொண்டிருந்தது; மக்கள் திரள் திரளாக, ஜெருசலம் நகரை நோக்கிப் புறப்பட்டார்கள்.

இயேசுநாதரும் தம் அப்போஸ்தலர் பன்னிருவரையும் அழைத்துக்கொண்டு, பாஸ்கு விழாவுக்காக, ஜெருசலம் நகருக்குப் புறப்பட்டார். இயேசுநாதரை நேசித்த

வர்களும், அவரோடு சேர்ந்து சென்றார்கள்.

''பரிசேயர்கள் கோபமாய் இருக்கிறார்கள். பிரதான ஆசாரியனும் கோபமாய் இருக்கிறான். இது சமயம் ஜெரு சலம் சென்றால் என்ன நேருமோ!'' என்ற கவலையோடு அப்போஸ்தலர்களும் இயேசுநாதரோடு போனார்கள்.

அவருக்குப் பின்னே வந்த மற்றும் சிலர், ஜெருசலத்தில் என்ன என்ன விபரீதம் நடக்குமோ என்று பயந்துகொண்டே சென்றார்கள்.

ஜெருசலத்தில் தமக்கு நேர விருப்பதை இயேசுநாதர் தம் அப்போஸ்தலர்களுக்குச் சொன்னார்: ''நாம் ஜெரு சலம் செல்கிறோம். ஆசாரியன்மார்களிடமும் வேதபாரக ரிடமும் மனுமகனைக் காட்டிக்கொடுப்பார்கள். மரண தண்டனை விதிக்கப் பெற்று, யூதர் அல்லாத மக்களிடம் மனு மகன் ஒப்படைக்கப்படுவார். அவர்கள் மனுமகனை அடிப் பார்கள்; முகத்தில் காரி உமிழ்வார்கள்; கொல்லவும் செய் வார்கள்; ஆனால், மூன்றாம் நாளன்று அவர் உயிர்த்தெழு வார்'' என்று நினைவுபடுத்தினார்.

பல முறை இயேசுநாதர் இதைப்பற்றித் தம் அப்போஸ் தலர்களுக்கு எடுத்துக் கூறி இருந்தும், அவர்கள் மனம் அதை ஏற்கவில்லை. பல புதுமைகளைச் செய்த இவர், இறந்தவர் களையே உயிர்ப்பித்த இவர், ஒரு போதும் மரணமடைய மாட்டார்; மரணமடையவும் முடியாது என்று அவர்கள் கருதினார்கள்.

இயேசுநாதர் ஒரு இராச்சியத்தை நிறுவும் பொருட்டுத் தான் ஜெருசலம் போகிறார் என்று தப்பாக எண்ணிக் கொண்டார்கள்.

இப்படித் தப்பாக எண்ணியவர்களில் இருவர் மிக முக்கியமானவர்கள். ஜானும் ஜேம்ஸும் இயேசுநாதரின் பன்னிரு சீடர்களில் இருவர். இவர்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள்; இயேசுநாதரோடு மூன்று ஆண்டுக் காலமாக, நெருங்கிப் பழகியவர்கள்; அவர் செய்த போதனைகளை அருகே இருந்து செவிமடுத்தவர்கள்; அவர் செய்த புதுமைகளையும் நேரில் பார்த்தவர்கள்.

இருந்தும் உலகத்தின் பந்தபாசங்கள் இந்த இருவரையும் விட்டு நீங்கவில்லை. இயேசுநாதர் ஜெருசலம் சென்று அங்கே ஒரு இராச்சியத்தை நிறுவப் போகிறார் என்று இந்த இருவரும் தப்பாக நினைத்தார்கள்; அப்படி நிறுவ இருக்கும் இராச்சியத்தில் முக்கியமான இரு பதவிகளைத் தாங்கள் இருவரும் கைப்பற்றிக்கொண்டுவிட விரும்பினார்கள். முன்னதாகவே முயன்று, அதுபற்றி இயேசுநாதரிடம் உறுதிமொழி வாங்கிக்கொள்ள அவர்கள் இருவரும் ஆசைப்பட்டார்கள்.

தாங்கள் நேரில் கேட்பதைக் காட்டிலும், தங்கள் தாயைக் கொண்டு சிபாரிசு செய்யச் சொன்னால், விரும்பிய பதவி தங்களுக்குக் கிட்டிவிடும் என்று அவர்கள் இருவரும் நம்பினர். இவர்களின் தாய் சலோம் என்பவள் இவர்களுக்குப் பின்னே வந்துகொண்டிருந்தாள்.

ஆகவே, ஜானும் ஜேமஸூம தங்கள் தாயிடம் சென்று இயேசுநாதர் ஒரு இராச்சியத்தை ஜெருசலத்தில் நிறுவப் போவதாகவும், முந்திக்கொண்டு நமக்கு வேண்டும் பதவி பற்றி இயேசுநாதரிடம் தெரிவித்துவிட வேண்டும் என்றும் கூறினர்.

தாயும் சம்மதித்தாள். மூவரும் இயேசுநாதரிடம் சென்று தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கலாயினர். அவர்களின் தாய் இயேசுநாதரிடம், "அண்ணலே! என் புதல்வர்கள் இருவரும் தங்கள்பால் அளவற்ற மதிப்பும் அன்பும் வைத்திருக்கின்றனர். தங்கள் வீட்டையும் தாங்கள் செய்த தொழிலையும் துறந்துவிட்டு, தங்களை அண்டி இருக்கின்றனர். ஆகவே, தாங்கள் நிறுவப்போகும் அரசில் என் புதல்வர்கள் இருவருக்கும் தாங்கள் பதவிகொடுக்க வேண்டும்; ஒருவனைத் தங்களுக்கு வலப்புறத்திலும் மற்றவனைத் தங்களுக்கு இடப்புறத்திலும் பதவியில் அமர்த்திப் பெருமைப்படுத்த வேண்டும்" என்று கூறினாள்.

தங்கள் விருப்பத்தை அவர்கள் கூறி முடிக்கும்வரை பொறுமையுடன் இயேசுநாதர் கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு வாலிபர் இருவரையும் கனிவோடு நோக்கி "உங்களது விருப்பம் எத்தகையது என்பதை அறியாமலேயே அதை

நீங்கள் கேட்கிறீர்கள். நான் பருகும் பானத்தை உங்களால் பருக முடியுமா? எனக்கு நேரவிருக்கும் கதியை உங்களால் ஏற்க முடியுமா?'' என்று கேட்டார்.

''எங்களால் முடியும்!'' என்று, ஆவலோடும், தைரியத்தோடும் அந்த வாலிபர் இருவரும் பதில் சொன்னார்கள்.

''உங்களால் முடியும்தான். ஆயினும் என் வான் உலகத் தந்தை, தாம் விரும்புவோரை அந்தந்தப் பதவியில் அமர்த்துவார்'' என்று சொல்லிவிட்டார்.

இந்த இரு அப்போஸ்தலர்களும் பதவிபற்றி இயேசு நாதரிடம் செய்துகொண்டுள்ள விண்ணப்பத்தை அறிந்து மற்ற அப்போஸ்தலர்கள் முதலில் ஆத்திரப்பட்டனர். பிறகு, பதவி மோகத்தில் வீழ்ந்து, தங்கள் விருப்பத்தை இயேசுநாதரிடம் அவர்களும் தெரிவித்துக்கொண்டனர்.

ஆகவே, அப்போஸ்தலர் அனைவரையும் தம்மால் அழைத்து, பதவிமோகம்கொண்டு அவர்கள் அலைவது குறித்து எச்சரிக்கை செய்து, இயேசுநாதர் புத்திமதி சொன்னார்: ''பிறரை அதிகாரம் செலுத்த விரும்புவன், முதலில் அடிமைபோல் ஊழியம் புரியத் தெரிந்துகொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரை, பிறரிடம் ஊழியம் பெறுவதற்காக நான் வரவில்லை; பிறருக்கு ஊழியம் செய்யும் பொருட்டே நான் வந்திருக்கிறேன்'' என்று சொல்லி, அப்போஸ்தலர்களின் பதவி மோகத்தை இயேசுநாதர் கண்டித்தார்.

சக்கேயு

எபிரேமிலிருந்து புறப்பட்ட இயேசுநாதர் தம் சீடர்களுடன் ஜெரிக்கோ நகரை அடைந்தார். இந்த நகரம் பழைமையான நகரம். மாடமாளிகைகள் நிறைந்த நகரம். இந்த நகர் அருகே வந்தபோது, சந்தடி நிறைய இருப்பதை அறிந்து, ஒரு குருடன் பக்கத்தில் இருந்தவர்களைக் காரணம் என்ன என்று கேட்டான்.

''நாசரத்தைச் சேர்ந்த இயேசுநாதர் வருகிறார்'' என்று அங்கு இருந்தவர்கள் சொன்னார்கள்.

இயேசுநாதர் புரிந்த புதுமைகள்பற்றிக் கேள்விப்பட்டிருந்த இந்தக் குருடன் கண் பார்வை பெற ஆசைப்பட்டான். ''கர்த்தரே! தாவீதின் புதல்வரே! என்மீது கருணைகாட்டுங்கள்'' என்று கூவிக்கொண்டே அவரிடம் போனான்.

''அப்பால் போ'' என்று மற்றவர்கள் அந்தக் குருடனை அதட்டினார்கள்.

விவரம் தெரிய வந்து, இயேசுநாதர், அந்தக் குருடனை தம்பால் அழைத்துவரச் சொன்னார்.

வந்ததும் அவனைப் பார்த்து, ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று இயேசுநாதர் கேட்டார்.

''எனக்குக் கண்கள் தெரிய வேண்டும்'' என்று அவன் சொன்னான்.

இயேசுநாதர் அவனுடைய கண்களைத் தொட்டுக் குணப்படுத்தினார். பார்வை பெற்று, கூட்டத்தோடு அவனும் சேர்ந்துகொண்டான்.

இதன் பின்னர், இயேசுநாதர் ஜெரிக்கோ நகருக்குள் நுழைந்தார். மக்கள் பெருத்த ஆரவாரத்துடன் அவரை வரவேற்றார்கள். ''இந்தப் புண்ணியவானைத்தான் பரிசேயர்கள் கொல்ல நினைக்கிறார்கள்'' என்று மக்கள் தங்களிடையே பேசிக்கொண்டார்கள். குருடனோ, தான் கண்கள் பெற்ற அதிசயத்தை மக்களுக்கு எடுத்துக் கூறி, சான்றாகத் தமது கண்களைக்காட்டி, இயேசுநாதரைக் கொண்டாடினான்.

திரள் திரளாக மக்கள் இயேசுநாதரைத் தரிசிக்க வந்தபடியால், ஜன நெருக்கம் அதிகமாக இருந்தது.

ஜெரிக்கோ நகரில் ஆயக்காரர்களுக்குத் தலைவன் ஒருவன் இருந்தான்; அவன் பெயர் சக்கேயு. பணக்காரனாய் இருந்த அவன், இயேசுநாதரைத் தரிசிக்க விரும்பி வந்தான். கூட்டம் அதிகமாய் இருந்தபடியாலும், தான் குள்ளமாய் இருந்தபடியாலும், இயேசுநாதரைச் சக்கேயுவால் தரிசிக்க முடியவில்லை. ஆகவே, பக்கத்தில் இருக்கும்

காட்டு அத்தி மரத்தின்மீது ஏறிக்கொண்டு சக்கேயு இயேசுநாதரைக் கவனித்தான்.

சக்கேயு அந்த நகரில் முக்கியமானவன்; ஆயக்காரர்களின் தலைவன்.

இயேசுநாதர் அந்த மரத்து அருகே வந்தார்.

மரத்தின்மீது இருக்கும் சக்கேயுவைப் பார்த்து, ''ஏ சக்கேயு! சீக்கிரம் கீழே இறங்கி வா! இன்று உனது இல்லத்தில் நான் தங்க விரும்புகிறேன்'' என்று சொன்னார்.

சக்கேயுவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. மரத்திலிருந்து கீழே குதித்தான். இயேசுநாதரை அழைத்துக் கொண்டு, தனது இல்லத்துக்குப் புறப்பட்டான்.

கொடிய பாவி என்று தாங்கள் கருதும் ஒருவனோடு, இயேசுநாதர் சேர்ந்து செல்வது, அங்கு இருப்பவர்களுக்குப் பிடிக்கவில்லை. ''பாவியோடு இவர் இப்படிக் கலந்து பழகுகிறாரே!'' என்று முணுமுணுத்தார்கள்.

சக்கேயுவோ மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். பொது மக்கள் பெரிதும் போற்றிக் கொண்டாடும் பெரியவர் ஒருவர் தமது இல்லத்துக்கு எழுந்தருளி இருப்பது குறித்து, சக்கேயு பெருமிதம் அடைந்தான்.

அப்போது அவனுடைய மனச் சாட்சி, ஏதோ ஒரு வகையில் அவனை உறுத்தத் தொடங்கிற்று. ''பெரியோரை உபசரிப்பது மட்டும் போதுமா? அவர்கள் செய்யும் போதனைப்படி நடப்பதும் முக்கிய மல்லவா?'' என்று சக்கேயு நினைத்தான்.

நினைத்ததோடு மட்டும் அவன் நிற்கவில்லை. காரியத்திலும் கடைப்பிடித்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். ஆகவே, இயேசுநாதரை நோக்கி, ''அண்ணலே! என்னிடம் இருக்கும் செல்வத்தில் பாதியை ஏழை எளியவர்களுக்குக் கொடுத்துவிட விரும்புகிறேன். அநீதியாகச் சேகரித்து இருக்கும் பொருளுக்கு ஈடாக அவற்றை நான்கு மடங்காகப் பெருக்கித் திருப்பிக் கொடுத்துவிட ஆசைப்படுகிறேன்'' என்று சொன்னான்.

சக்கேயு சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டு

இயேசுநாதர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். ''இன்று இந்தக் குடும்பம் ஈடேற்றம் அடைகிறது; சிதறுண்டு போனதைச் சேர்த்து ஈடேற்றம் கொடுக்கவே நான் வந்திருக்கிறேன்'' என்று இயேசுநாதர் கூறினார்.

கிறிஸ்து சமயத்துக்கு உயிர்நாடியாக இருக்கும் கருத்தொன்று இதில் அடங்கியுள்ளது. இந்தக் கோட்பாட்டை உண்மையாகவே மனித சமுதாயம் பின்பற்ற முயலுமாயின், உலகில் அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் அணுக்குண்டுகளுக்கும் இடம் இருக்க முடியுமா?

கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றும் செல்வச் சீமான்களுக்கு, சக்கேயுவுக்கு இருந்ததைப் போன்ற மனநிலை இருக்குமானால், ''உன் நாடு; என் நாடு, உன் இனத்தான், என் இனத்தான்'' என்ற பேத மனப்பான்மை ஏற்பட முடியுமா?

தேசாபிமானத்தைக் காட்டிலும், மனிதாபிமானத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதன்படி மக்கள் அனைவரும் மனவுறுதியுடன் நடக்க, எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக!

நறுமணத் தைலம்

இதன் பின்னர் இயேசுநாதர் ஜெரிக்கோவிலிருந்து ஜெருசலத்துக்குப் புறப்பட்டார். பாஸ்கு விழா நடப்பதற்கு, ஆறு நாட்கள் முன்னதாக, வழியில் இருக்கும் பெத்தனி என்னும் கிராமத்துக்கு இயேசுநாதர் தம் சீடர்களுடன் வந்தார். அன்று சனிக்கிழமை.

அன்றைய இரவுப் பொழுதைப் பெத்தனியில் கழிக்க விரும்பினார் இயேசுநாதர். அந்த ஊர் மக்கள் இயேசுநாதரைப் பெரிதும் நேசித்தார்கள்; மேரி, மார்த்தா, லாசரஸ் ஆகிய மூவரும் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள்; இயேசுநாதரிடம் அளவற்ற பிரியம் உடையவர்கள்.

ஆயினும் இயேசுநாதர் அன்று இரவு அவர்கள்

வீட்டில் தங்கவில்லை; சைமன் என்னும் செல்வந்தர் ஒருவர் வீட்டில் அவர் தங்கினார்.

இந்தச் சைமன் முன்பு தொழு நோயால் நொந்து வாடியவர்; இவருக்குள்ள நோயை இயேசுநாதர் குணப் படுத்தி இருக்க வேண்டும். அதனால் இந்தப் பணக்காரச் சைமன் இயேசுநாதரைப் பெரிதும் போற்றினார்; விருந்து வைத்து, அவரை உபசரிக்க விரும்பினார்.

இயேசுநாதர் அவருடைய இல்லத்துக்கு விருந்து உண்ணச் சென்றார். விருந்து ஆரம்பமாயிற்று.

விருந்தினர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

இது சமயம் கதவைத் திறந்துகொண்டு, மேரி அங்கே தோன்றினாள். அவள் கையில உயர்தரமான வாசனைத் தைலமுள்ள சிமிழ் ஒன்று இருந்தது.

அவள், இயேசுநாதர் அருகே சென்று, சிமிழைத் திறந்து, முதலில் இயேசுநாதர் தலைமீது வாசனைத் தைலத்தை ஊற்றினாள்; பிறகு அவருடைய இரு பாதங் களிலும் வாசனைத் தைலத்தைப் பூசினாள்; அதன் பின்னர், தமது கரிய கூந்தலை அவிழ்த்து, அதால் இயேசுநாதரின் இரு பாதங்களையும் அன்போடும் பணிவோடும் துடைத்து விட்டாள்.

விருந்து நடைபெறும் அந்த இடம் முழுதும் நறுமணத் தால் கமழ்ந்தது.

தன் சகோதரன் லாசரஸை உயிர்ப்பித்துத் தந்த இயேசுநாதர்மீது, மேரி அளவற்ற நேசம் வைத்திருந்தாள். உயர்தரமான நறுமணத் தைலத்தைப் பூசி, தனது நன்றி யறிதலைத் தெரிவிக்க விரும்பினாள். அதன் பொருட்டுத் தான், விருந்து நடக்கும் இடத்துக்கு வந்தாள்; இயேசுநாதர் தலையிலும் கால்களிலும் தைலத்தைக் கொட்டி, தான் செலுத்த விரும்பிய மரியாதையைச் செலுத்தினாள்.

இதை, யூதாஸ் இஸ்காரியத் என்பவன் கவனித்தான். ''உயர்தரமான நறுமணத்தை இப்படிக் கொட்டி வீணாக்க லாமா? இந்தத் தைலத்தின் மதிப்பு மூந்நூறு தெனி யருக்குக் குறையாதே; ஏழை எளியவர்களுக்கு இந்தப்

பணத்தை வழங்கி இருந்தால் பயனுடையதாய் இருக்கும்'' என்று தரும நியாயம் பேசினான்.

உண்மையில் அவனுக்குத் தரும சிந்தையும் கிடையாது; நியாய புத்தியும் கிடையாது. நிதிக் காப்பாளனாக இருந்த இவனுக்கு நேர்மையும் கிடையாது; நாணயமும் கிடையாது; இந்தப் பணம் கிடைத்தால், தன் சுய காரியத்துக்குப் பயன்படுத்த வாய்ப்பு நேர்ந்திருக்குமே என்பதற்காகத்தான் இவ்வாறு சொன்னான்.

இயேசுநாதரும் அவருடைய சீடர்களும் சேர்ந்து ஊர் ஊராகச் சென்று போதனைகள் செய்து வந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அப்போது மக்கள் கொடுக்கும் பணத்தைச் சேகரம் செய்து வைக்கவும், தேவைப்படும் போது அதைச் செலவிடவும் அவசியம் ஏற்பட்டது.

இந்த இரு பொறுப்புகளையும், யூதாஸ் இஸ்காரியத் செய்து வந்தான்.

உடனே இயேசுநாதர், ''இவளைச் சும்மா விட்டு விடுங்கள்; இவள் நல்லதொரு காரியம் செய்திருக்கிறாள்'' என்று சொன்னார்.

இதன் பின்னர், மற்றவர்கள் வாயடங்கிச் சும்மா இருந்தார்கள்.

ஜெருசலம் நகரில்

இரவை இயேசுநாதர் பெத்தனியில் கழித்தார். லாசரஸ், மார்த்தா, மேரி, மூவரும் அன்று இயேசுநாதருடன் இருந்தார்கள்.

அடுத்த நாள் காலை, இயேசுநாதர் தம் சீடர்களுடன், பெத்தனியிலிருந்து ஜெருசலத்துக்குப் புறப்பட்டார். எது குறுக்கு வழியோ, அந்த வழியாக, இயேசுநாதர் ஜெருசலத்துக்குப் போனார்.

தம்மைக் கொல்வதற்கு ஜெருசலத்தில் சதி நடக்கிறது என்பதை இயேசுநாதர் அறிவார். அறிந்திருந்தும் எதற்காக

இயேசுநாதர் ஜெருசலம் சென்றூர்?

மக்களை நல்வழியில் திருப்புவதற்குப் போதனைகள் மட்டும் போதா; புதுமைகள் மட்டும் போதா; மகத்தான தியாகம் ஒன்றைச் செய்தா லல்லது, மக்களின் மனத்தைப் கவர முடியாது, அதைப் பூரணமாக நல்ல வழியில் திருப்ப முடியாது என்பதை அறிந்தவர் அவர். ஆகவே, அந்தத் தியாகத்தைச் செய்து, திருந்தாத மக்களையும் திருத்தும் பொருட்டு, இயேசுநாதர் ஜெருசலம் சென்றூர்.

முன்பு மற்றவர்கள் செய்த சதிகளிலிருந்து, தமது தெய்விக வலிமையால் தம்மைப் பாதுகாத்துக்கொண்ட இயேசுநாதர், இப்பொழுது மனமுவந்து, அதே தெய்விக உணர்வால், தமது இன்னுயிரையும் தியாகம் செய்ய ஜெருசலம் நோக்கிப் போகிறூர்.


கூட்டமாக நிறையப் பேர் அவரைப் பின்தொடர்ந்து செல்கிறூர்கள். புதிதாக உயிர்பெற்று எழுந்த லாசரஸையும், இயேசுநாதரையும் வியப்பு மேலிட்டு மாறி மாறிப் பார்த்துக் கொண்டே, பின்தொடர்ந்து அவர்கள் போகிறூர்கள்.

''பரிசேயர்களும் பிரதான ஆசாரியனும் மிகுந்த கோபமாய் இருக்கிறூர்களே! ஜெருசலத்தில் என்ன என்ன விபரீதம் நேருமோ!'' என்ற அச்சம் சிலருக்கு இருந்தது. ஆயினும், எல்லாரும் ஜெருசலம் நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். ஏனெனில், பாஸ்கு விழாவும் நெருங்கிக் கொண்டிருந்தது.

காலையில் புறப்பட்ட இயேசுநாதர், தம் சீடர்களுடன் நடந்து, ஒலிவேத்து மலைமீது ஏறி, அதன் மறு புறத்தில் இறங்கினூர். ஜெருசல நகரம் சமீபத்தில் இருந்தது.

மலை அடிவாரத்தில் இறங்கியதும், தம் சீடர்களில் இருவரைக் கூப்பிட்டு, ''எதிரே தெரியும் பெத்பாஜே பேட்டைக்கு நீங்கள் செல்லுங்கள் உள்ளே நுழைந்ததும், யாரும் இதுவரை சவாரி செய்யாத கழுதைக் குட்டி ஒன்று கட்டப்பட்டு இருப்பதை நீங்கள் காண்பீர்கள். அந்தக் கழுதைக் குட்டியை அவிழ்த்துக்கொண்டு என்னிடம் வாருங்கள். யாராவது 'கழுதைக் குட்டியை ஏன் அவிழ்க்

கிறீர்கள்?' என்று உங்களைக் கேட்டால், 'கர்த்தருக்குத் தேவைப்படுகிறது' என்று பதில் சொல்லுங்கள்'' என்று சொன்னார்.



அதன்படி சீடர்கள் இருவரும் சென்றார்கள். குறிப்பிட்ட ஒரு இடத்தில் கழுதையும் அதன் குட்டியும் கட்டப்பட்டு இருப்பதைக் கண்டு, இரண்டையும் அவிழ்த்தார்கள்.

இதைக் கவனித்த சொந்தக்காரர்கள், ''ஏன் எங்கள் கழுதையையும் குட்டியையும் நீங்கள் அவிழ்க்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

''இயேசுநாதருக்குத் தேவைப்படுவதால், நாங்கள் அவிழ்க்கிறோம்'' என்று சீடர்கள் தெரிவித்தார்கள்.

விவரம் தெரியவந்ததும் கழுதைக்குச் சொந்தக்காரர்கள் சும்மா இருந்துவிட்டார்கள்.

கழுதையும் அதன் குட்டியும் வந்து சேர்ந்ததும், மக்களுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. கோலாகலமாக ஜெருசல நகருக்குள் பிரவேசிக்கலாம் என்று அவர்கள் உற்சாகம் அடைந்தார்கள். கழுதைக் குட்டிமீது துணியை விரித்து, இயேசுநாதரை அதன்மீது ஏறிக்கொள்ளச் செய்தார்கள். சிலர் முன்னதாகச் சென்று சமுக்காளம் விரிப்பது போல், தங்கள் துணிகளை விரித்தார்கள்.

பவனி ஆரம்பம் ஆயிற்று; இயேசுநாதர் கழுதைக் குட்டி மீது அமர்ந்துகொண்டு, ஜெருசலத்தை நோக்கிப் புறப்பட்டார். மக்கள் ஆரவாரம் செய்துகொண்டு அவருக்கு முன்னும் பின்னும் சென்றார்கள்.

நகரை நெருங்கிய சமயம் கூட்டம் மிகுதியாக இருந்தது.

மரக் கிளைகளை ஒடித்து, மக்கள் மகிழ்ச்சியுடன் வழிகளில் போட்டார்கள். சிலர் குருத்துக்களை ஒடித்துக் கையில் பிடித்துக்கொண்டு, ''ஆண்டவன் பெயரால் வருகிறவர் வாழ்க! வந்துகொண்டிருக்கும் நம் தாவீது அரசரின் அரசு வளம் பெருக!'' என்று வாழ்த்து ஒலி எழுப்பினார்கள்.



ஜனங்களின் ஆரவாரத்தையும் உற்சாகத்தையும் கண்டு, ஜெருசல நகரில் இருக்கும் அதிகாரிகளும், பிரமுகர்களும் பரிசேயர்களும் பயந்து போனார்கள். இந்த ஆரவாரமும் உற்சாகமும மட்டு மீறிப்போனால், தங்கள் அதிகாரத்துக்கே ஆபத்து நேரலாம் என்று அஞ்சினார்கள். ஆகவே, அவற்றைத் தணிக்க விரும்பிய அவர்கள், இயேசுநாதரைப் பார்த்து, ''உம் சீடர்களை அடக்கிக் கட்டுப்படுத்தும்; கூப்பாடு போட்டுச் சந்தடி செய்யாமல் அமைதியாகப் போகச் சொல்லும்'' என்று சொன்னார்கள்.

அதற்கு இயேசுநாதர், ''ஆர்ப்பரிக்க வேண்டாம் என்று இவர்களை நான் பேசாது இருக்கச் செய்வேனாயின், இதோ கிடக்கும் கற்கள் ஆர்ப்பரிக்கத் தொடங்குமே?'' என்று கேட்டார்.

இது சமயம் பவனி ஜெருசலம் நகருக்குள் நுழைந்தது. குழந்தைகள் முதலாய் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை,

''தாவீதின் புதல்வர் வாழ்க! வாழ்க!'' என்று வாழ்த்து ஒலி செய்து, தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

குழந்தைகள் வாழ்த்தொலி செய்வதைப் பார்த்ததும், குருமார்களுக்கும் பிரமுகர்களுக்கும் கோபம் அபாரமாக வந்துவிட்டது. அவர்கள் இயேசுநாதரைப் பார்த்து, ''குழந்தைகள் கூப்பாடு போடுவதைப் பார்த்தீரா?'' என்று கோபத்துடன் கேட்டார்கள்.

''குழந்தைகளின் வாயினின்று புகழ்ச்சியை அடைந்தீர்' என்று நீங்கள் படிக்கவில்லையா?'' என்று கேட்டார் இயேசுநாதர்.

இந்தப் பதிலைக் கேட்டுப் பரிசேயர்கள் ஆத்திரம் அடைந்தார்கள். ஆயினும் அவர்களால் இயேசுநாதரை ஒன்றும் செய்ய முடியவில்லை. ''உலகமே அவனுக்குப் பின்னால் போகிறதே! என்ன செய்வது?'' என்று தங்களுக்கு இடையே பரிசேயர்கள் பேசிக்கொண்டார்கள்.

இயேசுநாதரை அவர் போக்கின்படி விட்டுவிட்டு, சும்மா இருக்கப் பரிசேயர்களின் மனம் ஒப்பவில்லை. குற்றம் சாட்டுவதற்குரிய தக்க காரணத்தையும், தக்க சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்து அவர்கள் காத்து இருந்தார்கள்.

மனுமகன்

இயேசுநாதர் கோலாகலமாகத் தம் சீடர்களுடன் ஜெருசலம் நகருக்குள் நுழைந்தபோதிலும், இன்னும் நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர், அந்த நகருக்கு நேரவிருக்கும் கதியையும் அழிவையும் நினைந்து, இப்பொழுது கண்ணீர் சிந்தினார்.

பின்னர் ஜெருசலம் கோயிலுக்குள் இயேசுநாதர் நுழைந்தார். சந்தடியும் சலசலப்பும் கூப்பாடும் கோஷமும் மிகுதியாய் இருந்தன. குழந்தைகள் ஆரவாரம் செய்து கூவினார்கள். கூனும் குருடும் சப்பாணியும், கூச்சலிட்டுக் கொண்டு இயேசுநாதரை அணுகி, ''அண்ணலே! எங்களை

வாட்டும் பிணிகளைக் குணப்படுத்தும்'' என்று இறைஞ்சினார்கள்.

தம்பால் வந்தவர்களின் பிணிகளை எல்லாம் இயேசுநாதர் குணப்படுத்தினார்.

ஜெருசலம் கோயிலுக்கு யாத்ரீகர்கள் நிறையப் பேர் வந்திருந்தார்கள். யூத சமயத்தைச் சாராதவர்கள் பலரும் வந்திருந்தார்கள். கிரேக்க நாட்டினரான இவர்கள், கோயிலின் முற்றத்தில் அமர்ந்து, அங்கு நடப்பவைகளைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு இருந்தார்கள்.

கோலாகலமாகப் பவனி ஒன்று வருவதைப் பார்த்ததும், கிரேக்கர்கள் விவரம் என்ன என்று பக்கத்தில் இருந்தவர்களை விசாரித்தார்கள்.

''புதுமைகள் புரியும் பெரியவர்'' என்று விவரம் தெரிய வந்து, தாங்களும் இயேசுநாதரைச் சந்திக்க விரும்புவதாக, அப்போஸ்தலர் பிலிப்பிடம் கிரேக்கர்கள் சொன்னார்கள்.

கிரேக்கர்களும் இயேசுநாதரைத் தரிசிக்க விரும்புவதை அறிந்து, பிலிப்பு அளவற்ற ஆச்சரியம் அடைந்தார். பிறகு, தமது ஊர்க்காரரர் ஆண்ட்ருவிடம் கிரேக்கர்களின் விருப்பத்தைத் தெரிவித்தார் பிலிப்பு,

பிறகு, இருவரும் சேர்ந்து சென்று,கிரேக்கர்களின் விருப்பத்தை இயேசுநாதரிடம் தெரிவித்தார்கள்.

இந்த இரு சீடர்ளிகடமும் இயேசுநாதர், ''மனு மகன் மகிமை பெறும் வேளை வந்திருக்கிறது.மண்ணில் புதைந்து மடியாவிடில், கோதுமை மணி அப்படியேதான் இருக்கும். மடிந்தாலோ மிகுந்த பலனை அது நிச்சயம் தரும'' என்று சொன்னார்.

''ஒரு கோதுமை மணி, மண்ணில் விழுந்து புதைந்து, தன்னைத் தானே பலியிட்டுக்கொள்ள முன்வராவிடின், எப்பொழுதும் ஒரு மணியாகத்தான் அது இருக்கும். அப்படியின்றி, தன்னைத் தானே அது பலியாக்கிக்கொள்ளுமாயின், அந்த ஒரு மணியிலிருந்து, பல மணிகள் உற்பத்தியாகக் கூடும். இதைப் போலவே, என்னை நானே பலியாக்கிக் கொண்டு, உலக மக்களுக்கு ஈடேற்றத்தைத் தரப் போ

கிறேன்'' என்னும் கருத்தில்தான் இயேசுநாதர் மேற்கண்டவாறு சொன்னார்.

இயேசுநாதர் மேலும் தொடர்ந்து பேசினார்: ''என்னைப் போலவே, என்னைப் பின்பற்ற விரும்புபவர்களும், தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாராய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நித்திய வாழ்வு அவர்களுக்குக் கிட்டும்'' என்று சொன்னார்.

உயர்ந்த எந்த ஒரு கோட்டுபாடும் தொடர்ந்து உலகில் பெருமையுடன் பரவவேண்டுமாயின், அந்தக் கோட்பாட்டை முதன் முதலில் பிரச்சாரம் செய்ய முன்வந்தவர் மட்டும் உயிர்த் தியாகம் செய்தால் போதாது. அவரைப் பின் பற்றும் சீடர்களும் உறுதியுடன் நின்று, தொடர்ந்து உயிர்த் தியாகம் செய்ய வேண்டும். அப்போதுதான் அந்தக் கோட்பாடு என்றென்றைக்கும் உலகில் பெருமையுடன் நிலவ முடியும்.

வெறும் பிரச்சாரத்தினால் மட்டும் ஒரு கொள்கை வெற்றி யடையாது; அதற்கு உயிர்த் தியாகம் இன்றியமையாத தேவை என்பதை இயேசுநாதர், வலியுறுத்திப் பேசி இருக்கிறார். இந்த மாபெரும் அரிய போதனை, ஒவ்வொருவர் நெஞ்சத்திலும் பசுமரத்தாணிபோல் பதியுமாயின், உலகம் எவ்வளவு மேன்மையாய் இருக்கும்!

இந்த உண்மையை மேலும் வலியுறுத்தும் பொருட்டுத் தான் இயேசுநாதர், ''உயிரை நேசிப்பவன் தன் உயிரை இழப்பான்; தன் உயிரைத் தியாகம் செய்பவன், என்றைக்கும் வாழ்வான்'' என்று கூறி இருக்கிறார்.

ஒருவன் தன் உயிரை எவ்வளவுதான் நேசித்தாலும் அதை என்றைக்கும் அவனால் பாதுகாத்துக்கொள்ள முடியாது. ஆயினும் எவன் தன்னுயிரை மனமுவந்து ஒரு கொள்கைக்காகத் தியாகம் செய்கிறானோ, அவனுடைய புகழ் என்றுமே அழியாது இந்த மண்ணுலகில், நிலைத்து இருக்கும்; அந்த நிலையையே ''என்றைக்கும் வாழ்வான்'' என்னும் சொற்களால் இயேசுநாதர் குறிப்பிடுகிறார் என்று நாம் கொள்ளலாம்.

தமது மண்ணுலக வாழ்வு விரைவில் முடிய இருப்பதால், தமது கடைசி நாட்களை இயேசுநாதர் ஜெருசலம் நகரில் தான் கழித்தார். பகல் நேரங்களில் கோயில் அருகே அமர்ந்து போதனை செய்வதும், இரவு நேரங்களில் ஒலிவேத்து மலைக்குச் சென்று பிரார்த்தனை செய்வதுமாக, தமது பணியை இயேசுநாதர் செய்து வந்தார்.

இயேசுநாதருக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருவதைக் கண்ட பரிசேயர்கள், ஆத்திரம் அடைந்தார்கள். தருணம் பார்த்து, இயேசுநாதரைக் கைது செய்வதற்கும் தண்டிப்பதற்கும் அவர்கள் தயாராய் இருந்தார்கள்

அத்தி மரம்

ஞாயிற்றுக்கிழமை யன்று, கோலாகலமாக ஜெருசலம் நகருக்குள் நுழைந்த இயேசுநாதர், மாலை நேரம்வரை ஜெருசலத்திலேயே இருந்தார். அந்தி மயங்கிய சமயம் தம் சீடர்களையும் அழைத்துக்கொண்டு, ஜெருசலத்தின் ஒரு பேட்டையான பெத்தனிக்குப் போனார்.

இரவுப் பொழுதை அந்த ஊரில் கழித்துவிட்டு, மறு நாள் திங்கட்கிழமை யன்று காலையில் அங்கிருந்து, தம் சீடர்களுடன் ஜெருசலத்துக்குப் புறப்பட்டார் இயேசுநாதர்.

முன் தின இரவில் இயேசுநாதர் எதுவும் சாப்பிடவில்லை போலும். ஆகவே, நடந்து வரும்போது வழியில் அவருக்குப் பசி உண்டாயிற்று.

வழியில் இருந்த ஒரு அத்தி மரத்து அருகே அவர் போனார். இலைகள் அடர்ந்து அதிக பசுமையுடன் இருக்கும் அந்த அத்தி மரத்தில் ஏதாவது பழங்கள் இருக்கின்றனவா என்று இயேசுநாதர் அண்ணாந்து பார்த்தார்.

அத்தி மரத்தில் பூக்களும் இலைகளும் நிறைய இருந்தனவே தவிர, ஒரு அத்திப் பழம்கூட இல்லை.

இயல்பாக இந்தப் பருவத்தில்—அதாவது ஏப்ரல்

மாதத்தில் — பாலஸ்தீனப் பிரதேசத்தில் அத்தி மரங்கள் பூப்பது வழக்கமே யன்றி, காய்ப்பதோ பழுப்பதோ வழக்கம் இல்லை. அப்படி இருந்தும், இயேசுநாதர் அந்த அத்தி மரத்தை அண்ணுந்து பார்த்தார்.

பழம் இல்லாது போகவே, அந்த அத்தி மரத்தை இயேசுநாதர் சபித்தார். "இன்றிலிருந்து என்றைக்குமே யாரும் நீ தரும் கனிகளை அருந்தாது இருக்கட்டும்!" என்று சபித்தார்.

"பருவமல்லாத காலத்தில் அத்தி மரத்தில் பழத்தை எதிர்பார்ப்பதும், கிடைக்காவிட்டால் அதற்காக மரத்தைச் சபிப்பதும் நியாயமா?" என்று ஒரு கேள்வியை எழுப்பி, அதற்குச் சில ஆசிரியர்கள் விளக்கம் எழுதி இருக்கிருர்கள்.

அத்தி மரம் பற்றிய நிகழ்ச்சியை நாம் உருவகக் கண் கொண்டு பார்க்க வேண்டுமே யன்றி, வேறு விதமாகப் பார்க்கக் கூடாது என்று அவர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள்.

பரிசேயர்களும் ஆசாரியர்களும் இந்த அத்தி மரத்தைப் போல் பகட்டாக இருக்கிருர்கள். ஆனல், பயன் தரத்தக்க காரியம் குறைவு. அத்தகைய முறையில் வாழ்வது சாபத்துக்கு இடம் அளிக்கும் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அத்தி மரத்தை இயேசுநாதர் சபித்து இருக்கிருர் என்று சில ஆசிரியர்கள் விளக்கம் எழுதி இருக்கிருர்கள்.

இதன் பின்னர் இயேசுநாதர் தம் சீடர்களுடன் ஜெருசலம் சென்று, திங்கட்கிழமைப் பகல் பொழுதை ஜெருசலம் நகரில் போதனை செய்வதிலும் வாக்குவாதங்களுக்குப் பதில் சொல்வதிலும் கழித்தார்.

பிறகு மாலை நேரம் வந்ததும், பெத்தனிக்குத் திரும்பினர். இரவுப் பொழுதைப் பெத்தனியில் கழித்துவிட்டு, செவ்வாய்க்கிழமை காலை, அங்கிருந்து மீண்டும் ஜெருசலம் நகருக்குக் கிளம்பினர்.

வழியில், இயேசுநாதர் சபித்த அத்தி மரம் இருப்பதைச் சீடர்கள் பார்த்தார்கள்.

மரம் பட்டுப் போய் இருந்தது. இதைப் பார்த்ததும்

பீட்டர் வியப்புற்றார். உடனே அவர் இயேசுநாதரை நோக்கி, ''போதகரே! தாங்கள் சபித்த அத்தி மரம் பட்டுப் போய் இருக்கிறது'' என்று சொன்னார்.

இதற்கு இயேசுநாதர், ''நம்பிக்கை மட்டும் இருந்தால் மலையையும் அசைத்து நகர்த்த மனிதனால் முடியும்'' என்று பதில் சொன்னார்.

கேள்வியும் பதிலும்

நாளுக்கு நாள் இயேசுநாதரின் புகழ் அதிகரித்துக் கொண்டே போயிற்று. பொது மக்கள் அவர் செய்யும் போதனைகளை விருப்புடன் கேட்டார்கள். அவர் செய்த புதுமைகளால் நலம் அடைந்தவர்களில் பெரும்பாலோர், எப்பொழுதும் அவர் அருகே இருந்து, ஆதரவு தந்தார்கள்.

பரிசேயர்களுக்கும் குருமார்களுக்கும் பிரமுகர்களுக்கும், பொது மக்களின் ஆதரவு இயேசுநாதருக்குக் கிடைப்பது பிடிக்கவில்லை. இயேசுநாதரிடமிருந்து பொது மக்களைப் பிரித்துவிட்டால், தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை மேலும் ஸ்திரப்படுத்திக்கொண்டு, இயேசுநாதரை ஒழித்துக் கட்டிவிடலாம் என்று நினைத்தார்கள். ஆகவே, அதற்கான காரியங்களில் அவர்கள் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள்.

செவ்வாய்க்கிழமை யன்று, வழக்கம்போல் இயேசுநாதர் ஜெருசலம் ஆலயத்துக்கு வந்தார்.

அவர் வரவை எதிர்பார்த்து, பொதுமக்கள் முற்றத்தில் காத்து இருந்தார்கள். பரிசேயர்களும் குருமார்களும், இயேசுநாதரை வாக்குவாதத்துக்கு இழுத்து, அவருடைய மதிப்பைப் பொதுமக்களுக்கு எதிரே குறைத்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் கூடி இருந்தார்கள்.

இயேசுநாதர் வந்து முற்றத்தில் அமர்ந்ததும், பொது மக்கள் ஆரவாரம் செய்து அவரை வரவேற்றார்கள்.

வாக்குவாதம் செய்வதற்கு எனத் தயாராக வந்திருந்த

பரிசேயர்கள் தங்கள் திறமையைக் காட்டத் தொடங்கி, பேச்சை ஆரம்பித்தார்கள். அதைத்தையுடன் இயேசுநாதரை நோக்கி, "எந்த அதிகாரத்தினால், இந்தக் காரியங்களை எல்லாம் நீர் செய்கிறீர்? உமக்கு அதிகாரம் தந்தது யார்?" என்று கேட்டார்கள்.

தகுந்த பதில் சொல்லத் தெரியாது இயேசுநாதர் திரு திரு என்று விழிப்பார்; அதன் பயனாய் பொது மக்களிடையே அவருக்கு இருக்கும் செல்வாக்கைக் குறைத்துவிடலாம் என்று எண்ணித்தான் இந்தக் கேள்வியைக் குருமார்கள் கேட்டார்கள்.

அதற்கு இயேசுநாதர், அவர்களிடம், "நானும் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். அந்தக் கேள்விக்கு நீங்கள் பதில் சொன்னால், நீங்கள் கேட்ட கேள்விக்கு நானும் பதில் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு "புனித நீராட்டுச் செய்யும் அதிகாரம் ஜான் முனிவருக்குக் கிடைத்தது, தெய்வத்தால் உண்டானதா? அல்லது மனிதரால் உண்டானதா?" என்று கேட்டார்.

சிக்கலான இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது எனப் பரிசேயர்கள் திகைத்தார்கள். 'தெய்வத்தால் உண்டானது?' என்று பதில் சொன்னால், 'நீங்கள் ஏன் ஜான் முனிவரைப் பின்பற்றவில்லை?' என்று கேட்டு, நம்மை தெய்வ நிந்தனைக்கு உட்படுத்துவார். அப்படியின்றி, 'மனிதரால் உண்டானது என்று பதில் சொல்வோமாயின், தீர்க்கதரிசி என்று கொண்டாடும் பொது மக்களின் கோபத்துக்கு நாம் ஆளாக நேரும். ஆகவே என் செய்வது?' என்று சிறிது நேரம் சிந்தித்தார்கள். பிறகு "ஜானுக்குக் கிடைத்த அதிகாரம் எப்படி வந்தது என்பதை நாங்கள் அறியோம்" என்று மழுப்பலாகப் பதில் சொன்னார்கள்.

"அப்படியானால் எனக்கு அதிகாரம் எங்கிருந்து வந்தது என்பதை நானும் உங்களுக்குச் சொல்ல மாட்டேன்" என்று இயேசுநாதர் பதில் சொல்லிவிட்டார்.

பிறகு தமது கருத்தை நன்கு விளக்கும் பொருட்டும், குருமார்களின் கபட நெஞ்சத்தைக் காட்டும் பொருட்டும்

அவர்களுக்கு இயேசுநாதர் ஒரு சிறு கதை சொன்னார்.

"ஒரு மனிதனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். தங்கள் தந்தைக்குச் சொந்தமான திராட்சைத் தோட்டத்தில் இருவரும் வேலை செய்வது வழக்கம். ஒரு நாள், அவர்களின் தந்தை தன் மூத்த புதல்வனைக் கூப்பிட்டு, "மகனே! இன்று திராட்சைத் தோட்டத்துக்குச் சென்று காரியங்களைக் கவனி" என்று சொன்னான்.



"சரி அப்பா!" என்று பதில் சொல்லி விட்டு, திராட்சைத் தோட்டத்துக்குப் போகாமலே, சும்மா இருந்து விட்டான் மூத்த மகன்.

தன் இளைய புதல்வனைக் கூப்பிட்டு, "மகனே! நீ சென்று, திராட்சைத் தோட்டத்து வேலைகளைக் கவனி" என்று ஏவினான் தந்தை.

"நான் போக மாட்டேன்" என்று இரண்டாவது மகன் முதலில் மறுத்துவிட்டான். ஆயினும் சிறிது நேரத்திற்குப் பின்னர் மனம் திருந்தி, இரண்டாவது மகன் திராட்சைத் தோட்டத்துக்குச் சென்று வேலைகளைக் கவனித்தான்.

இவ்வாறு கதையைச் சொல்லிவிட்டு, "இந்த இரு புதல்வர்களில் யாரைத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றியவனாகக் கூறலாம்? 'போகிறேன்' என்று சொல்லிவிட்டுப் பிறகு போகாமல் இருந்தவனையா? 'போக மாட்டேன்' என்று சொல்லிவிட்டுப் பிறகு போனவனையா?" என்று இயேசுநாதர் கேட்டார்.

"இளைய மகன்தான். இதில் வேறு சந்தேகமா?" குருமார்கள் கூறினார்கள்.

உடனே இயேசுநாதர் பரிசேயர்களையும் குருமார்களையும் பார்த்து, "உங்கள் போக்கு மூத்த மகன் நடத்தைக்கு ஒப்